
# சிறுத்தொண்ட பத்தன் கதை



வித்தியா ரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

சென்னை.

இதன் விலை] 1940 [அணா—5

23849

உ

கடவுள் துணை.

புகழேந்திபுலவர் இயற்றிய

# சிறுத்தொண்ட பத்தன்கதை.



சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1929.

இதன்விலை அணா—5.

கடவுள் துணை.

# சிறுத்தொண்டபத்தன் கதை.

## விநாயகர் தோத்திரம்.

முன்னின்றுவரந்தரும் பிள்ளையாரேகந்தர்
முக்கணனார்பெற்றெடுத்த முதலோனே
சென்றுதிசைவென்றுவரும் பிள்ளையாரேகந்தர்
தீங்கொன்றும்வாராமல் காத்தளிப்பாய்
கொம்பனையுமையாளும் சிறியோனேயின்னம்
குஞ்சரமுகந்தனின் மூத்தோனே
நம்பினேன்நாரணன் மருகோனேயின்னம்
நந்துமையாள்பெற்றெடுத்த நாதனாரே
தம்பியேவுலகேழும் வலமாய்வரச்சொன்ன
தந்தைதாயைவலம்வந்த சதிரோனே
ஈசன்மகனாரே பிள்ளையாரேகந்தர்
ஈரேழுலகுக்கொரு தனிமுதலே
மாயன்மருகோனே பிள்ளையாரேகந்தர்
வளருங்குழந்தைகுரு பரனையா

## சரஸ்வதி தோத்திரம்.

வாணிகலைவாணி சரஸ்வதியேயெங்கள்
மறையவனாரிட தேவியம்மா
நான்முகனாருடைய நாவிலேநின்றுதமிழ்
நான்மறையோதுவிக்கும் தேன்மொழியே
சிறுத்தொண்டனார்தமிழ் யானுரைத்தத்தினம்
சிந்தையில்வந்துதித்து தெளிவுசொல்வாய்
கன்னகரிப்பாலனும் கலியாணச்சோழனும்
அவரிடவம்மிஷங்கள் மிகவாழ்க
தென்னகரிப்பாலகனும் திருநீற்றுச்சோழனும்
செங்கோல்முறைகட்டி பரசாண்டார்
ஆறிலொன்றாகவே வரங்கொண்டான்சோழன்
அன்பாகராஜ்யபாரந் தன்னையாண்டான்
ஏழிலொன்றாகவே வரங்கொண்டான்சோழன்
எண்ணிராஜ்யபாரந் தன்னையாண்டான்

## கதையின் வரலாறு.

மன்னவனேஐந்து பாண்டவரைவரில்
வணங்காதமுடிபெற்ற கருணராஜன்
காசிநதிதனிலே போயிருந்துகர்னன்
கையில்சிவலிங்கப் பூசைசெய்தார்

திருச்செங்காட்டிலே சின்னமெடுத்தல்லோ
சிறுத்தொண்ட பத்தனென்று பெயரெடுத்தான்
சிவபூசையரிபூசை குருபூசைமறவாமல்
திருவெண்காட்டுநங்கையுடன் வாழ்ந்திருந்தான்
சிவனார்வரமளித்த கட்டளைப்படியாக
சீராளதேவனையும் பெற்றெடுத்தார்
சீராளதேவனும் பிறந்தேழுவயதாகி
திருப்பள்ளிக்காளாக்கித் தான்படிப்பான்
இப்படியிருக்கின்ற நாளையில்வெண்காட்டா
ளேதுசொல்வாள் தன்புருஷன் முகம்நோக்கி
நீதேடின திரவியம் வேணதுண்டுபத்தா
திருப்பாங்களுக்கன்னம் நீரிடுங்காண்
பொன்னைத்தான்பொருளைத்தான் தின்னலாமோபத்தா
அன்னங்கொடுங்காணும் அன்பனாரே
காசுபணத்தைதான் தின்னலாமோபத்தா
கடைத்தெருவிலன்னக்கொடி கட்டுமென்றார்
அன்னக்கொ ட்டுமென்றாய் வெண்காட்டுநங்கையே
அனந்தவிருதுகள் வேணும்பெண்ணே
உன்மனமானாற்போல் என்மனமானாலே
உறுதிதவநிலைக்கும் பெண்ணேயென்றான்
என்மனமானாற்போல் உன்மனமானாலே
எள்ளளவுந்தவங் குறையாது
நானுண்டிக்கிடச்சொன்னால்நீ தாதனுக்கிட்டாலே
அதனால்தவங்கள்புண்யம் வருவதுண்டோ
அப்படிதவறுவேனோ அடியாள்நீர்சொன்னசொல்
ஆதிசிவனறியச் சொல்லுகிறேன்
அருமைபிள்ளையொருவன் சீராளன்தன்னாணை
அனகத்தவவுறுதி சொல்லுமென்றார்
அப்படியாகுதென்று சிறுத்தொண்டபத்தனார்
அன்னக்கொடியெடுத்துக் கட்டுவாராம்
வருவார்க்கும்போவார்க்கும் அமுதுபடைப்பேனென்று
தலைவாசலன்னக்கொடி கட்டுவானும்
நின்றநின்றசங்கமர்க்கு அமுதுபடைப்பேனென்று
நிலையாகஅன்னக்கொடி கட்டுவானும்
சென்றசென்றசங்கமர்க்கு அமுதுபடைப்பேனென்று
தெருவிலேஅன்னக்கொடி கட்டுவானும்
அன்னக்கொடிநின்றங்கே வாவென்றழைக்குமாம்
அழகியசிறுத்தொண்டர் வாசலிலே
அன்னக்கொடிவிருதும் ஆராட்சிபொன்மணியும்
அசையுதவனுடைய வாசலிலே
ஆயிரம்பேர்க்கன்னம் சரியாய்நிறைந்தபின்

ஆராட்சிமணியொன்று அடிபடுமாம்
ஐயாயிரம்பேர்க்கன்னம் சரியாய்நிறைந்தாலே
ஐந்துகொத்துநவமணிக ளடிபடுமாம்
ஆயிரம்பேர்க்கொருவர் குறைந்ததேயுண்டானல்
அசையாமலாராட்சி மணியடிக்கும்
ஆயிரம்பேர்களுண்டால் இலையில்கரிகலத்தில்
அவர்களிருவரும் புசித்திடுவார்
ஆயிரம்பேரிலே ஒருவர்குறைந்தாலே
அருந்தார்களிருவரும் ஜலபானம்
விரதங்குறையாமலே சிறுத்தொண்டபத்தனும்
வெண்காட்டுநங்கையுடன் வாழ்ந்திருந்தான்
இப்படியிருக்கின்ற நாளையிலீஸ்பரன்
ஏதுசொல்வாருமையவள் தன்னுடனே
எனக்குநிகரானே ரில்லையென்றுதொண்டன்
எடுத்தானே அன்னக்கொடி விருதுமணி
அன்னக்கொடிவிருதை யறுப்போமோபெண்ணே
அவனுடைய அன்புபக்தி சோதிப்போமோ
பத்தனைப்போவனடி பார்வதியுமையே
சித்தனைப்போவனடி சிவத்தெளிவே
அன்னக்கொடிவிருதை யறுப்பாரோசுவாமி
அவனுடையவன்புபக்தி சோதியென்றாள்
பத்தாய்ப்போனுலுந் தம்பிரானேவும்மை
பரமனென்றறிவார்கள் மானிடர்கள்
சித்தாய்ப்போனாலும் தம்பிரானேசிவனே
சென்றோவொட்டார்கள் மானிடர்கள்
மண்ணிலுள்ளமனிதர்கள் மகிழும்படியாக
வைரவர்வேஷத்தை கொள்ளுமென்றாள்
கண்டவர்களுனைப்பார்த்து மகிழும்படியாக
கங்காளவேஷத்தை கொள்ளுமென்றாள்
உமையவள்சொல்புத்தி நிசமென்றுஎண்ணியே
உத்திராட்சந்தாவடந் தரிப்பாராம்
கொங்குகுருந்துமலர் சாற்றுவாராமையர்
குவளம்பூவன்னிமாலை சாத்துவாராம்
வேங்கையுடனேநல்ல நாணலும்பன்னீரும்
விதவிதபுஷ்பமெல்லாம் தரிப்பாராம்
விரித்தசடையும்வெண் பாரிகள்வொளியாம்
மேலெங்குமேறிவிட்ட விற்படுமே 5×5
ஆதித்தமுகமும் அதிமுகத்தாவடமும்
அலங்காரத்துடனே குண்டலமும்
வடித்தவொருவெளன்றே சிறுத்தொண்டதேவனை
வண்மைகள்சோதிக்க வேண்டுமென்று

கலியுகத்திசைநோக்கி நடக்குமளவினில்
    காலிலேயிட்டதொரு பொன்சிலம்பாமையர்
மார்பிலேபூண்டதொரு சங்குகாயம்
    கலீல்கலீரென்று நடப்பாராமையர்
கால்பிணிநூல்பிணி வாராமலே
    காணச்சிவன்பாதம் வேணியில்பார்வதி
காவேரியார்வந்து விளங்குவாளாம்
    கோங்குகுடகிலே மழைப்பொழிவெள்ளம்
குமரிகாவேரி வெள்ளம்பெருக
    முல்லைவனத்துமலைக் கொள்ளைகொண்டுவெள்ளம்
மூங்கில்வனத்துக்கலை முடிக்கவைத்து
    சந்தனமரத்தைத் தறித்தடுக்கிவெள்ளம்
தாருள்ளவாழை நடத்திக்கொண்டு
    மஞ்சாளிஞ்சி மணமுள்ளமல்லிகையுடன்
மாதளங்காய்ஊமத்தை மிதத்திடுமாம்
    மேட்டிலேபுள்ளதொரு மேவுபுளிமுதலை
முழிகள்சிவக்ககெங்கை மிதத்திடுமாமங்கே
    மிருகங்களங்கங்கே வசித்திருக்கும்
காட்டிலேவாழுகின்ற காடிபுலிசெந்நாய்
    கண்கள்சிவக்ககெங்கை மிதந்திடுமாம்
கல்லுருவவெள்ளிமலை யுருகிக்கைலாச
    பர்வதத்தைவலம்வந்து சூழ்ந்திடுமாம்
அத்தனைவகுத்தல்லோ ஐயருடபாதத்தை
    புஷ்பமாகநின்றல்லோ பணிந்திடுமாம்
வந்ததொருகாவேரியை கையாலமர்த்தியே
    தம்பிரான்கரைவிட்டு யேறுவாரும்
அப்பன்சிறுத்தொண்டன் மனமறியசுவாமி
    யாருமில்லாதேசிவ னொருவனானார்
அந்நேரம்சிவனடி யார்களைக்காணாமல்
    அவருடதேவியுட னேதுசொல்வான்
இந்நேரந்திருப்பேருக் காயிரம்பேர்க்கன்னம்
    ஈந்திடுவோம்பெண்ணே நாமென்னசெய்வோம்
இன்றைக்கொருவரும் இல்லாமற்போச்சுது
    இப்பொழுதேதேடிக்கொண்டு நான்வருவேன்
வந்ததொருசங்கமருக் கன்னங்கொடுத்துப்பெண்ணே
    மலர்ப்பாதம்பணிந்தே தொழுதிடவும்
திருப்பெருமடங்களைத் தேடப்போனானன்பன்
    சிவனொருமந்தவேளை வருகலுற்றார்
திருவடிக்கமலமுந் திருச்சிலம்போசையும்
    கையினில்சூலமும் டமரகமும்
ஆடிடமாகம் சாடிப்பாராமையர்

அண்டரண்டபகிரண்ட மதிர்ந்திடவே
திருக்கையில்டமரகம் சாடிப்பாராமையர்
தெய்வலோகம்புவனங்க ளதிர்ந்திடவே
தெருவிலேவிளையாடும் சிறுபிள்ளைகள்தம்பி
சிறுத்தொண்டமடமேது சொல்லுமென்றார்
அறியார்க்கறியவேதான் தம்பிரானேசிவனே
அதோவல்லோதோணுதுபார் அன்னக்கொடி
தெரியார்க்குத்தெரியவேதான் தம்பிரானேசிவனே
அதோவல்லோதோணுதுபார் அன்னக்கொடி
சிறுத்தொண்டனரண்மனை தெருவாசல்வந்துநின்று
ஜெயகண்டிவாத்தியத்தை தானடித்தார்
அதுகேட்டாளம்மை வெண்காட்டுநங்கையுடன்
சந்தனநங்கையுந் தானுமாக
சத்திவந்தாம்மை சூழவலம்வந்து
சீர்பாதம்போற்றியென்று தான்பணிந்தாள்
வந்தபொழுதிலே தெண்டனிட்டாளம்மை
வருந்தியேமடத்திலே அமுதுஞ்சொன்னாள்
கண்டபோதிலே தெண்டனிட்டாளம்மை
கடுகியேமடத்திலே அமுதுஞ்சொன்னாள்
உருக்கியநெய்களுடன் பொரிக்கறியாம்பின்னும்
உளுந்துவடைகளுடன் மாங்கனியும்
கொத்துமாங்கனியாக் கனியுடனேயமுது
கொள்ளவேமடத்திற்கு வாருமையா
வந்துபணிந்ததொரு வெண்காட்டுநங்கை
வாயாரவாழ்த்தியே சேர்த்தெடுத்தார்
மங்கிலியம்வாழ்ந்திருப்பாய் மாதாவேதாயே
மகாதேவரருள்பாதம் போற்றிவாழ்வாய்
சந்தானம்வாழ்ந்திருப்பாய் மாதாவேதாயே
சாகாதஆண்பிள்ளையைப் பெற்றுவாழ்வாய்
நீயுமுன்கணவனும் உன்னுடையசுற்றத்தாரும்
உமையவரருள்பாதம் போற்றிவாழ்வாய்
நீதானிங்கேவந்து கும்பிட்டாயேதாயே
உன்கணவனெங்கேயென்று கேட்டாராம்
இறப்பார்பரப்பாராய் ஈசரடியாரை
இட்டுவரப்போனார் அடியார்களை
ஆளனில்லாமனையி லுண்ணேனம்மாதாயே
அவ்விடத்திலன்னமிட்டால் கொள்ளேனென்றார்
புருஷனில்லாமனையி லுண்ணேனம்மாதாயே
பொற்கலத்திலன்னமிட்டால் கொள்ளேனென்றார்
தருக்கியபொன்னிலே தங்கக்கட்டித்தந்தாலும்
தலைவனில்லாமனைதனி லுண்ணேனென்றார்

## சிறுத்தொண்டபத்தன் கதை.

உருக்கியபொன்னிலே ஒருபடிதந்தாலும்
உளவனில்லாமனை தனி லுண்ணேனென்றார்
எங்கேயெழுந்தருளி யிருப்பீரோவையா
அங்கேவரச்சொல்லுகிறே னும்மடியாரை
கோவில்மதிலோரம் சார்ந்திருப்பேனம்மா
கோலமான திருஆத்தி அடியிருப்பேன்
அப்படியேநல்லதென்று வெண்காட்டுநங்கைக்
கருளிய திருஆத்தி அடியில்வந்தார்
திருஆத்திமரத்தைத் தேடிவந்தாரையர்
சிறுபுலியாசனத்தை போட்டமர்ந்தார்
ஆத்திமரத்தடியில் வீற்றிருந்தபொழுதிலே
காற்றுமழைகளும் உண்டாச்சி
காற்றுமழைகளும் கடுங்காற்றுமின்ன
கடுகியேமங்களங்கள் சோபிடவே
இலைகள்கருகின்ற திருவையாத்திமரம்
இலைதழைத்தேமரம் நிழலிடுமோம்
பூவாதேநின்றதொரு கயிலாயஆத்திமரம்
பூத்தல்லோபுட்பமாய்ச் சொரிந்திடுமோம்
காயாகநின்றதொரு கருமையாத்திமரம்
காய்த்துக்கனிபழமாய்ச் சொரிந்திடுமோம்
ஒருபக்கம்செண்பகம் பூர்த்திடுமோம்
ஒருபக்கம்பாதிரி பூர்த்திடுமோம்
ஒருபக்கம்மல்லிகைப் பூர்த்திடுமோம்
ஒருபக்கம்மிருவாட்சி பூர்த்திடுமோம்
அப்படியேகொற்றதொரு ஆத்திமரத்தண்டை
ஐயர்பரமசிவன் வீற்றிருந்தார்
தேடப்போனஅந்த சிறுத்தொண்டறேவனையான்
திகைத்துமயங்கியே மடத்தில்வந்தான்
சுத்திதாராய்பெண்ணேநீ சுத்திதாராயடிபெண்ணே
கழுத்தையறிந்துகொள்ள சுத்திதாராய்
ஒற்றியூர்சிற்றம்பலம் ஓடினேன்தேடினேன்
அங்கேயொருசங்கமரைக் கண்டதில்லை
குற்றாலங்குானுடு ஓடினேன்தேடினேன்
குருபரனவரைக் கண்டதில்லை
வண்ணாரப்பெண் ணுக்காக மணம்புகுந்தாரையர்
அண்ணாமலைப்பழனி தேடிவந்தேன்
அண்ணாமலைப்பழனி ஓடினேன்தேடினேன்
அங்கேயொருசங்கமரைக் கண்டதில்லை
கழுக்கள்வலமாய்வந்து நயினாரைபூசிக்கும்
திருக்கழுக்குன்றபதி தேடிவந்தேன்
திருக்கழுக்குன்றபதி ஓடினேன்தேடினேன்

சிவபூசைசெய்வாரைக் கண்டதில்லை
குளங்கள்குளக்கரைகள் ஓடினேன்தேடினேன்
குருபரனானவரைக் கண்டதில்லை
மடங்கள்மடப்பள்ளிகள் ஓடினேன்தேடினேன்
ஒருமகாதேவரையும் கண்டதில்லை
ஆயிரஞ்சங்கமருக் கமுதளிப்போம்பெண்ணே
அவர்கள்வைத்தபரிகலத்தை யடியேன்கொள்வேன்
இன்றைக்கொருசங்கமரும் வாராமற்போனது
ஈஸ்வரனார்தம்முடைய செயலிதுவே
விரதங்கள்முடியாமல் போச்சுதேயானால்
விடுவேனேயென் னுடைய வுயிரையென்றார்
கத்திதாராய்பெண்ணேநீ கத்திதாராய்பெண்ணே
கழுத்தையறிந்துகொள்ள கத்திதாராய்
கத்தியேன்கேழ்க்கிறீர் அன்பனாரேபத்தா
கருமபலன்கள்தன்னை தேடுகின்றீர்
மஞ்சாறுபெருகியே பொய்கையிலேபண்ணை
மடுவிலேமடைந்தசெந் தாமரைப்போல்
அஞ்சாமல்முகங்குளிர்ந் திருந்தாயேபெண்ணே
வந்தாருண்டோ திருப்போரூர் மடந்தனிலே
வந்தாருண்டன்பனே வந்தாருண்டொருவர்
மகாதேவர்தன்னைப்போல் வந்தாருண்டு
வந்ததொருசங்கமரை யெங்கைபோகவிட்டு
வாழ்ந்தவலக்காரமோ பேசுகிறாய்
என்தாரமென்றல்லோ நானிருந்தேன்பெண்ணே
பிறர்தாரமானதை நானறியேன்
வீட்டினில்லாளென்றல்லோ நானிருந்தேன்பெண்ணே
வேசியாளானதை நானறியேன்
சிவனடியாளென்றல்லோ நானிருந்தேன்பெண்ணே
சிவத்துரோகியானதை நானறியேன்
என்தாரமென்பதற்கு ஒருகுறைவுமில்லை
உத்தமரேயொன்றுசொல்லக் கேளுமென்றான்
பள்ளியிற்படிக்கின்ற சீராளன்தன்னை
பதராதேவொருவார்த்தை சொல்லுகிறேன்
வந்தார்வந்தாரொரு சங்கமனார்வந்தார்
மகாதேவர்தன்னைப்யோல் வந்தாரையா
அவ்வொருவர்க்கமுதுநாம் கொடுப்போமேயானால்
ஒருகோடிசங்கமர்க்கு ஒவ்வுமென்றாள்
அவரேகமதுவீட்டில் அமுதுண்பாராமானால்
ஆயிரஞ்சங்கமர்க்கு ஒவ்வுமென்றாள்
அவரைக்கண்டபொழுதில் தெண்டனிட்டேயடியேன்
கடுகியேமடத்திலே யமுதுசொன்னேன்



வந்தபொழுதிலே தெண்டனிட்டேனடியேன்
வருந்தியேமடத்திலே யமுதுசொன்னேன்
ஆளனில்லாமடந்தனி லுண்ணேனென்றுரையா
அவ்விடத்திலன்னமிட்டால் கொள்ளோமென்றார்
கோவில்மதிலோரஞ் சேர்ந்திருப்பேனென்றார்
கோலமான திருவாத்தி யடிதனிலே
ஆத்திமரத்தடியில வீற்றிருப்போமென்றார்
அன்பனார்வந்தாலங்கே வரவேசொன்னார்
சாலத்தாலுலைகட்டு சமையடிபெண்ணே
கடுகியேசங்கமனைக் கொண்டுவாரேன்

சிறுத்தொண்டபத்தன் சங்கமவேஷம்பூண்ட
சுவாமியைத் தேடப்போகிறது.

ஒருசுற்றுவேஷ்டியும் தரித்தாராமன்பர்
ஒருபக்கம்பூணூலை போடுவாராம்
திருவெண்ணீரைந்தெழுத்தை யோதுவானுந்தொண்டன்
திருக்கொன்றைமாலையொன்று போடுவாராம்
திருக்கொன்றைமாலையொன்று மார்பிலசைந்தாட
திருவாத்திதிசைநோக்கி நடப்பாராம்
திருவாத்திமரந்தன்னில் தேடிவந்துபத்தன்
தெண்டநமஸ்காரஞ் செய்வானும்
ஆதியேஉன்பாதம் போற்றிபோற்றிசிவனே
அம்பலவாணனாரே போற்றிஐயா
சோதியேவுன்பாதம் போற்றிபோற்றிசிவனே
சிதம்பரதேவனாரே போற்றிஐயா
திருக்கொன்றைமாலையொன்று மார்பிலசைந்தாட
திருவாத்திதிசைநோக்கி நடப்பாராம்
திருவாத்திமரந்தன்னை தேடிவந்துபத்தன்
தெண்டநமஸ்காரஞ் செய்குவானும்

சிவவேடம்பூண்டபண்டாரத்தை சிறுத்தொண்ட
பத்தன் காணுதல்.

ஆதியேவுன்பாதம் போற்றிபோற்றிசிவனே
அம்பலவாணனாரே போற்றிஐயா
சோதியேவுன்பாதம் போற்றிபோற்றிசிவனே
சிதம்பரதேவனாரே போற்றிஐயா
ஆதியேவமுதுண்ண வாருமையாசிவனே
அரனாரேவமுதுண்ண எழுந்தருளும்தேவா
சோதியேயமுதுண்ண எழுந்தருளும்தேவா
சிதம்பரதேவனாரே வாருமையா
போற்றிபிடுகிற சத்தந்தன்னைக்கேட்டு
புலியூரவாணனார் முகம்பார்த்தார்

அழுதகள்ளாதொழுதகள்ளா எழுந்திரடாபத்தர்
ஆசாரக்கள்ளனுரே எழுந்திரடா
கும்பிடுங்கள்ளாநீ எழுந்திரடாபத்தா
குழைத்திடுங்கள்ளாநீ எருந்திரடாபத்தர்
அன்புள்ளாநீ யெழுந்திரும்பத்தா
ஆசாரமுள்ளவனே யெழுந்திரடா
உன்னைதானுசிறுத் தொண்டனுரென்பது
உலகமெல்லாம்பெரிய வார்த்தையானதுவும்
ஆமாங்காணுமாங்காண் தம்பிரானேசிவனே
அகத்துக்கருமப்படி யடியேனென்றான்
அமுதுக்கழைக்கவந்த சிறுத்தொண்டபத்தாநீ
அகத்திலேயென்னக்கறி சமைத்தாயோடா
விரும்பியழைக்கிறாயே சிறுத்தொண்டபத்தாநீ
வீட்டிலேயென்னகறி சமைத்தாயோடா
மண்டலத்தில்மனிதர்கள் வழங்கும்கறிவகை
மண்டலத்தில்சமைத்திருக்கும் சாமியென்றான்
இச்சையானகறிவகை இவ்வுலகிலுண்டானேர்
யேதேதோபலவகை பொசித்திடுவார்
உந்தன்மடந்தனிலே சமைக்குங்கறிவகை
உறுதியாகவேநீதான் சொல்லுமென்றார்
ஆனலுரைக்கிறேன் தம்பிரானேசிவனே
அறியவேகறிவகை சொல்லுகிறேன்

சிறுத்தொண்டபத்தன் சிவவேடம்பூண்ட பண்டாரத்திற்கு
பதார்த்தவகை சொல்லல்.

பூசினிக்காய்கறி சமைத்திருக்கும்மடத்தில்
புடலங்காய்கறிவகை சமைத்திருக்கும்
பாவர்க்காய்கறிவகை சமைத்திருக்கும்சாமி
பயத்தங்காய்பொறிக்கறி செய்திருக்கும்
வாழக்காய்கறிவகை சமைத்திருக்கும்சுவாமி
வழுதலங்காய்பச்சடி செய்திருக்கும்
பீர்க்கங்காய்கறிவகை சமைத்திருக்கும்சுவாமி
துவட்டல்செய்தவரைக்காய் பொறித்திருக்கும்
இத்தனைகறிவகைகள் எந்தன்மடத்திலே
இப்போதுசமைத்திருக்கும் வாருமையா
போதும்போதும்சிறுத்தொண்டா சொன்னகறிவகை
பொல்லாதவிதங்களைச் சொன்னுயோடா
பூசினிக்காயாவது அன்பனுரேகேளும்
அய்யருடதிருத்தொப்பை வயிறல்லோ
புடலங்காயாமது அன்பனுரேகேளும்
அய்யருடபோான சடையல்லவோ
ருங்கக்காயாவது சிறுத்தொண்டபத்தா

அய்யருடவுச்சிசடை தானல்லவோ
பாவற்காயானதுவும் அன்பனாரேகேளும்
ஐயருடருத்திராட்ச மாலையடா
அவரைக்காய்கறி பொரித்தேனென்றாய்பத்தா
ஐயருடபத்துவிரல் நகமல்லவோ
சுரைக்காய்கூட்டமுது செய்தேனென்றாய்பத்தா
ஐயருடகமண்டலம் தானல்லவோ
பீர்க்கங்காயாவது அன்பனாரேகேளும்
ஐயருடவிபூதியை தானல்லவோ
கத்திரிக்காயாவது அன்பனாரேகேளும்
ஐயருடதிருபூசை தானல்லவோ
வாழைக்காயாவதும் அன்பனாரேகேளும்
அய்யருடதிருநெற்றி சமைத்தாயோடா
நன்றாச்சுநன்றாச்சு சிறுத்தொண்டபத்தா
நல்லவிதக்கறிகள் சொன்னாயோடா
என்னையறுத்துபத்தா யெனக்குமேயிட்டுநீ
என்னையுங்கொல்லவகை பார்த்தாயோடா
இத்தனைகறிவகை சமைத்துநன்றாகவேதான்
எத்தனைபரதேசியைக் கொன்றாயோடா
தன்னையறுத்துத்தவ முணர்ந்தமகத்துகளோர்
தானறிந்தாரிந்த கறிவகைகள்
ஈதெல்லாம்வேண்டாமற் போனாலுமையரே
இன்னமொருவிதங்களைச் சொல்லுமென்றார்
ஆட்டிலொருகோடி தான்பொறிப்பேன்
மாட்டிலொருகோடி நான்பொறிப்பேன்
பாலுண்டுபழமுண்டு பண்டாரசிவமே
பசியாறிப்போகவல்லோ வாருமென்றேன்
ஆட்டைத்தான்கொல்லுகிற அரும்பாவிமனையிலே
அறியாதேயமுதுண்ண வந்தேனென்றார்
மாட்டைத்தான்கொல்லுகிற மாபாவியிடத்திலே
மத்தியானவிருந்துக்கு வந்தேனென்றார்
ஆட்டையுங்கொல்வதில்லை மாட்டையுங்கொல்வதில்லை
ஆவும்பசுக்களையும் நானறியேன்
புல்லைத்தின்னுமது நீரைக்குடித்தல்லவோ
போதஸ்தனங்கள் தன்னைக் கொண்டாடும்
அல்லல்படாமலே மேய்ந்துவந்தொடுங்கும்
ஆவும்பசுக்களையும் நானறியேன்
காட்டுமாங்கனிகளும் கொத்துமாங்கனிகளும்
சர்க்கரைகற்கண்டு பலாக்கனியும்
பாலுண்டுபழமுண்டு தம்பிரானேசிவனே
பசியாறிப்போகவல்லோ வாருமையா

பாலும்பழமெனக்கு வேண்டாமோடாபத்தா
பந்துஜெனமுண்டோ பத்தாயிவ்வூரிலே
இச்சையானகறிவகை பத்தனாரேயின்னம்
எடுத்துரைத்தால்சமைத்து வருவேனென்றார்

சிவவேடம்பூண்ட பரமசிவன் சிறுத்தொண்டபத்தனை
பிள்ளைகறி கேட்பது.

உனக்குநமக்கும் நலம்பெறவேணுமென்றால்
இளமானின் தன்கறி வேணுமென்றார்
நான்சொன்னபடிநீ கேட்பாயோபத்தா
அறிவுடனினைவாய்நீ கேட்பாயோடா
ஒருதாய்க்கொருபிள்ளை யாகவேணுமடா
உண்மையானபாலகனாய் வேணுமடா
தாய்க்குத்தலைமகனாய் வேணுமடாபத்தா
தான்பெற்றபாலகனாய் வேணுமடா
வயதிலேஅஞ்சாக வேணுமடாபத்தா
வம்மிஷபதியோனாய் வேணுமடா
குடிக்குஒருவனாக வேணுமடாபத்தா
கிளைக்குமொருவனாய் வேண்டுமடா
காலையிலேநாலுவேதம் ஓதவேண்டும்பத்தா
சீரானதேவதை வேண்டுமடா
இப்படிக்கொத்தபிள்ளை இருந்ததேயுண்டானால்
இட்சணமுன்னவே வருவேனென்றார்
தம்பிரான்சொல்லைக்கேட்டு சிறுத்தொண்டபத்தன்
தவக்குறைவாராமல் ஏதுசொல்வான்
அப்படிக்கொத்தபிள்ளை அடியேன்தருகிறேன்
அரனாரேசெய்யும்வகை சொல்லுமென்றான்
உச்சிதமாகவே உடனேபள்ளியிற்சென்று
உண்ணும்வகையாய்ப்பிள்ளையை யழைத்துவந்து
மஞ்சள்நீர்சாலையிலே வசந்தநீர்பாலித்து
மாதாமடியில்வைத்து திலர்தமிட்டு
பொட்டிட்டுமையிட்டு தாயார்கரத்தாலே
பொன்தொட்டினிலே தான்வளர்த்தி
தாலாட்டிபிள்ளைதனை தாயார்கரத்தாலே
தங்கப்பலகையினில் தானமர்த்தி
தாயாருங்காலை பிடிக்கவேண்டும்பத்தா
பெற்றதகப்பனார்கழுத்தை யறுக்கவேண்டும்
கழுத்தையறுத்து கழன்றவுதிரத்தை
கறிசட்டிதன்னில்வேறே வாங்கவேண்டும்பத்தா
உரலிலேதலைபோட்டுத் துவைக்கவேண்டும்பத்தா
உருப்பானமூளைபத்தும் வாங்கவேண்டும்

கண்ணுக்கறிகள்வேறே பொறிக்கவேண்டும்பத்தா
    காலகறிகள்வேறே சமைக்கவேண்டும்
பதினொருவிதமாக தலைக்கறிதன்னிலே
    பக்குவமாக சமைக்கவேண்டும்
அறுத்தமுண்டந்தன்னை குளிபாட்டித்தாயார்
    குதிதாளிசட்டியில்வைத்து அவிக்கவேண்டும்
அவித்தமுண்டத்தன்னை பெற்றதாயாரெடுத்து
    அறிவாமணையில்வைத்து அறியவேண்டும்
ஈரல்பிளந்துவேறே சமைக்கவேண்டும்பிறகு
    யிறச்சிவிதவிதமாய் பொறிக்கவேண்டும்
நெஞ்சிநிணக்குடல் வாங்கவேண்டும்பத்தா
    நிணக்குடலொருசட்டி சமைக்கவேண்டும்
பொன்பூண்டமார்பையும் நெஞ்சாங்குழலையும்
    பொறிக்கறியாகவே சமைக்கவேண்டும்
முழங்காலெலும்புகளும் முள்ளெலும்புகளும்
    மிளகுநீராகவே செய்யவேண்டும்
கணுக்காலெலும்புகள் காலெலும்புகளெல்லாம்
    கழுகழுவானமாகப் பொரிக்கவேண்டும்
பாடகமிட்டிருந்த கணுக்காலிரண்டையும்
    பட்டாடைமெலேவைத்து தரிக்கவேண்டும்
மோதிரமிட்டிருந்த முனைவிரலபத்தையும்
    முழுவர்ணமாகப் பொரிக்கவேண்டும்
போரானபெருந்துடை சதைகள்வகுத்தல்லோ
    பொன்போல்பொரித்தெடுத்து சமைக்கவேணும்
மார்புசதைகள்வேறே பொரிக்கவேண்டும்பத்தா
    வலதுதுடைகள்வேறே பொறிக்கவேணும்
ஆறுபொரியலும் அவிட்டல்துவட்டலும்
    பணியாரவிதத்துடன் பலவகையும்
எண்ணியெண்ணியொரு யிருபத்தொருவிதமாக
    பலவிதக்கறிகள் சமைக்கவேண்டும்
பலபலவகைக்கறி சமைக்கவேண்டும்பத்தா
    மூனுபண்டம்வேறேசாதம் சமைக்கவேண்டும்
இப்படிகறிதேடி படைப்பார்களெங்கள்
    சித்திரபவியுள்ள மணிதரெல்லாம்
பெற்றபோதுண்டான சந்தோஷம்போலே
    பிள்ளையை அழைக்க வேணுமடா
அழைக்கும்போதுண்டான சந்தோஷம்போலே
    பிள்ளையைஅறுக்கும்போதுண்டாக வேணுமடா
அறுக்கும்போதுண்டான சந்தோஷம்போலே
    அவிக்கும்போதுண்டாக வேணுமடா
அவிக்கும்போதுண்டான சந்தோஷம்போலே

அரியும்போதுண்டாக வேண்டுமடா
அரியும்போதுண்டான சந்தோஷம்போல
கறிசமைக்கும்போதுண்டாக வேண்டுமடா
சமைக்கும்போதுண்டான சந்தோஷம்போல
அழைக்கும்போதுண்டாக வேண்டுமடா
அழைக்கும்போதுண்டான சந்தோஷம்போல
அமுதுபடைக்கும்போதுண்டாக வேண்டுமடா
அமுதுகறியுமாக நிறவுமளவிலே
தமிழுங்கிரந்தமுமாய் மணக்கவேண்டும்
தமிழுங்கிரந்தமுமாய் மணக்கவேண்டுமுந்தன்
னைதயநல்லாள்சம்மதிக்க வேண்டுமடா
அப்படிக்குக்கறிதேடி படைக்கிறேன்சுவாமி
அறியனூர்மடத்துக்கு வாருமையா
காலங்கலிகாலங் கெட்டகாலம்பத்தா
கடன்சொன்னவார்த்தையை மறக்குங்காலம்
தம்பிக்குத்தமயன் பகையாளிபெற்ற
தானேபெரியவன் கோலமாகி
காடுசிறுத்தல்லோ நாடுபெருகுது
கடுகியேவருகிற கலியுகமாம்
குருவிருந்தஆசனத்தில் சீஷனிருந்து
கூறுங்கலையுரைக்கும் கொடியகாலம்
கொடுத்தகடன்கேழ்ப்பாரை கொல்லுங்காலம்பத்தா
கூசாமல்பெரியோரை வையுங்காலம்
பெற்றதாய்புத்திசொன்னு லுதைக்குங்காலங்கொண்ட
பெண்சாதிமயிர்பிடித்தால் பொறுக்குங்காலம்
கற்றவரைக்கல்லா லெறியுங்காலம்பத்தா
காலாதிகலியுக காலந்தானே
பிள்ளைக்கறியுஞ்சோறும் போடுகிறேனென்று
போதவேயெமக்குநீர் தாரைவாரும்
தண்ணியள்ளியெந்தனுக்கு தாரைவார்ப்பீரானல்
வருவதுமெய்யாகும் அன்பனுரே
சத்தியபிரமாணிக்கம் செய்யவேண்டுமோசுவாமி
ஓமென்றசொல்லு நமக்குப்போதாதோ
அய்யர்கைதிருச்சங்கு செயகண்டிவாங்கி
காவேரிசலந்தன்னைக் கொண்டுவந்தார்
அய்யர்கைதாழவுமாய் அன்பன்கைமேலுமாய்
அள்ளியெமக்குநீர் தாரைவாரும்
அய்யர்கைமேலுமாய் அன்பன்கைதாழவுமாய்
அள்ளியேவிபூதி தானளித்தார்
உச்சிக்குமுன்னலே அமுதுபடைப்பேனென்று
சத்தியமாய்முகந்துநீர் தாரைவார்த்தால்

உச்சியாலோடி தவழ்ந்ததேயுண்டானால்
உண்ணேனேடா உன்னிடமனையிடத்தில்
உச்சிக்கிமுன்னாலே அமுதுபடைப்பேனென்று
சத்தியமாய்முகக்துநீர் தாரைவார்த்தால்
முக்காலும்முகந்துநீர் வார்த்தசிறுத்தொண்டன்
நடந்தானே திருமடந் தனைநோக்கி
வேண்டிமடத்துக்கு நடக்குமளவிலே
வேறேகிலேசங்களை மனதிலெண்ணுன்
பெண்சாதிவெண்காட்டாள் மனதறியாமலே
பிள்ளைக்கறியுஞ்சோறும் சொல்லிவைத்தேன்
மனையாட்டிவெண்காட்டாள் மனதறியாமலே
மைந்தன்கறியுஞ்சோறும் சொல்லிவைத்தேன்
பெற்றவருத்தந்தனை பார்ப்பாளோ அவள்
பிள்ளைதன்னைகானறியே னென்பாளோதான்
வளர்த்த அருமைதன்னை பார்ப்பாளோதான்
அவள்மைந்தனைநானறியே னென்பாளோதான்
அடிகெட்டேன்பிடிகெட்டேன் என்பாளோதான்
அசலார்கள்சொற்பேச்சை கேழ்ப்பாளோதான்
எடுத்ததவக்குறைகளின்றைக்குப்பொய்யானு
லிக்ஷணமேவுயிரை விடுவோமென்று
மனதில்கிலேசமெண்ணி வருகிறவழிதனில்
வந்தமர்ந்தார்விக்கின விநாயகரும்
தொப்பையும்முப்புரிநூ லிலங்கிவர அவர்
தும்பிக்கையிருபுறங் குலுங்கிவர
சங்குசக்கரம் சதுர்புசமீதிலங்க
கேலில்தரித்தமது வண்டிலங்க
திங்களிலங்கத் திருநடனமிலங்கிட
செஞ்சிலம்போசைநின்று குலுங்கிட
வந்தமனதார சிறுத்தொண்டன்வரும்வழி
வழங்கும்பிரார்த்தனைகள் செய்வாரென்றே
கண்டானேசிறுத்தொண்டன் பிள்ளையார்கோயிலில்
தன்கலிகள்குறைதீர்க்க வந்தவரே
முக்கால்வலம்வந்து மூணுகுட்டிகுட்டி
மூஷிகவாகனரே தஞ்சமையா
என்பெண்சாதிமனது என்மனதுபோலானல்
பொற்குடங்கவிழ்க்கிறேன் பிள்ளையாரே
பொற்குடங்கவிழ்க்கிறேன் பிள்ளையாரேஉனக்கு
போதப்பொரியவல் படைத்திடுவேன்
கூறையால்கட்டிருந்த பிள்ளையார்கோவில்தன்னை
கல்லாலேகட்டிவைப்பேன் பிள்ளையாரே
கல்லாலேகட்டிவைத்த பிள்ளையார்கோவிலே

செம்பாலேகட்டி வைப்பேன் பிள்ளையாரே
செப்பாலேகட்டி வைத்த பிள்ளையார்கோயிலை
தங்கத்தால்கட்டி வைப்பேன் பிள்ளையாரே
தங்கத்தினாலிழைத்த பிள்ளையார்கோவிலை
மாணிக்கத்தாலிழைப்பேன் பிள்ளையாரே
கர்லக்கிண்ணிபாலக்கிண்ணி பதித்திடுவேணுமக்கு
தையனல்லாள்சம்மதிக்க வேணுமையா
பொற்குடங்கவிழ்க்கிறேன் பிள்ளையாரேவுமக்கு
உன்பெண்சாதிசம்மதிக்க வேணுமையா
இப்படியாகவே பிள்ளையாரைவேண்டி
வெட்காட்டுநங்கைதன்னை மிகவருந்தி
திரும்பிவருகையில் சிறுத்தொண்டபத்தன்
திருவெண்காட்டுநங்கை மனதிலெண்ணாள்
தம்பிரானைத்தேடிப்போன அன்பரைக்காணோமென்று
தானுமேதேடியே வருகலுற்றாள்
வேண்டிமடத்துக்கினி னடக்குமளவில்
வெண்காட்டுநங்கையம்மாளெதிரேவந்தாள்
கண்டான்சிறுத்தொண்டன் வெண்காட்டுநங்கையை
கைதொழுதாளம்மா கணவன்முன்னே
பொற்றும்பைகிள்ளி போடுவானும்பத்தன்
போற்றும்பாதமதை சோதிப்பானும்
பொன்னானமேனியெல்லாம் புழுதிபடர்ந்ததென்று
பொய்சொல்லிமெய்யாகத் துடைப்பானும்
தாலிசரட்டைமெள்ளத் தடவுவானும்பத்தன்
தலைமேல்துரும்பைக்கையா லெடுப்பானும்
கணவன்மாரீசங்களைக் கண்டல்லோவெண்காட்டாள்
களுக்கென்றெடுத்துமவளேதுசொல்வாள்
அஞ்சுபிராயத்தில் கையுந்தந்தேன்பத்தா
ஆயிரம்பெருந்தெருவு வலமாய்வந்தேன்
சின்னவயதினில் கைதந்தேனடியேன்
சீராளதேவனையும் பெற்றெடுத்தேன்
பாலகன்சீராளன் பிறந்துசமர்த்தனாய்
பள்ளிக்குள்விசித்திரனாய் தான்வளர்ந்தான்
இதுநடுவினிதுவளவினில்லாதகாரியம்
எத்தவந்தகாரியங்களேதோவென்றாள்
எத்தவந்தகாரியங்கள் மெத்தவுண்டுபெண்ணே
உன்னாலேயென்னாலே முடியாதடி
முடியாதுகாரியங்கள் முடியாதுபத்தா
முளையில்லாப்பயிரது விளையாது
இடியிடித்தால்மழை பொழியாதகாட்டிலே
யெழுதாதசூத்திரங்க ளுலகிலுண்டா

கட்டியடியாத கள்ளனுண்டோபத்தா
　கலங்கித்தெளியாத தண்ணீருண்டோ
நாரையறியாத குளமுண்டோபத்தா
　நமனையறியாம லுயிர்போமோ
என்னையறியாத காரியங்கள்வேருண்டோ
　யேத்தவந்தகாரியங்கள் சொல்லுமென்றார்
தம்பிரான்சொன்னசொல்லை கேட்டையானல்பெண்ணே
　ஈவிப்பாகவேவிழுந் தழுவாயடி
மறப்பாயோமறந் திருப்பாயோபெண்ணே
　வரத்தினல்செய்ததொரு தவத்தாலே
பெற்றவருத்தந்தன்னை பார்ப்பாயோபெண்ணே
　மைந்தன்தன்னைநானறியே னென்பாயோ
வளர்த்தஅருமைதன்னை பார்ப்பாயோபெண்ணே
　பிள்ளைதன்னைநானறியே னென்பாயோடி
அடிகெட்டேன்பிடிகெட்டே னென்பாயோபெண்ணே
　அசலார்கள்சொல்வார்த்தை கேழ்ப்பாயோடி
அப்படிக்கொருநாளும் வருவதில்லைதேவா
　ஐயர்சொன்னவார்த்தையை சொல்லுமென்றாள்
பிள்ளைகரியுஞ்சோறும் போடுகிறேனென்று
　பொருந்திவந்தேன்வெண்காட்டு நங்கையென்றாள்
மைந்தன்கறியுஞ்சோறும் போடுகிறேனென்று
　வருந்திவந்தேன்திருவெண்காட்டு நங்கையென்றான்
விரதவாத்தாலே நமக்கென்னகாரியம்
　இதுவொருபெரிதாகச் சொல்லவந்தாய்
விட்டகுறைவந்தால் விதியின்பயனச்சு
　வேறொருகாரியங்க ளெண்ணப்போமோ
நட்டவனருக்கின்ற பருவங்கள்வந்தாலே
　நற்போகம்சற்போகம் தானல்லவோ
பிள்ளைக்கறியுஞ்சோறும் போடுகிறேனென்று
　பொய்யாதவார்தன்னை நிலைநிறுத்தும
இன்னமிவள்மனதை போதிப்போமென்று
　யென்னசொல்வான் சிறுத்தொண்டபத்தனவன்
பொன்னைபொருளைக்கொஞ்சம் தருவாயோடிபெண்ணே
　பூமியிலேபுத்திரனை கொண்டுவாரேன்
காசுபணத்தைகொஞ்சம் தருவாயோடிபெண்ணே
　கண்ணறியாபாலகனைக் கொண்டுவாரேன்
தேடிதிரவியந் தாராயோபெண்ணே
　சிறுபிள்ளையாராய்ந்துக் கொண்டுவாரேன்
பொன்னைப்பொருளைத்தான் தந்தாலுமன்பா
　பூமியிற்புத்திரனை தருவாருண்டோ

காசுபணத்தைத்தான் தந்தாலுமன்பா
　கண்ணறியாப்பாலகனைத்தான் தருவாருண்டோ
அப்படியேயல்லவென்று தந்தாலுமன்பரே
　பிள்ளையையறுத்துக்கறி சமைக்கத்தருவாருண்டோ
அறுத்துக்கறிசமைக்க தந்தாலுமன்பா
　அடியார்க்குஅன்புடனே படைப்பாருண்டோ
தோட்டத்துமரக்கறி இங்கிருக்கபத்தா
　தெருவெங்குந்தேடியே போவாருண்டோ
அகத்துமரக்கறி யிங்கிருக்கபத்தா
　அங்காடிகறித்தேடி போவாருண்டோ
நங்கைபடிகறிக ளிங்கிருக்கபத்தா
　நாட்டிலேகறிதேடி போவாருண்டோ
தோட்டத்துமரக்கறி யானதும்பெண்ணே
　சொன்னாரேஉடற்கூ ராகாதென்றார்
அகத்துமரக்கறி யாவதும்பெண்ணே
　ஐயருடன்கூ ராகாதென்றார்
தோட்டத்துமரக்கறி யாவதுமன்பா
　நமக்குநம்மிடபிள்ளை சீராளன்தான்
நங்கையடிக்கறிக ளாவதுமன்பா
　நமக்குநம்பிணபிள்ளை சீராளன்தான்
நாம்பெற்றபிள்ளையை நாமேயறுத்துவிட்டால்
　நமக்கேதவங்கள்வந்து சேருமென்றாள்
பத்திரமும்முக்கணையு மெடுத்துக்கட்டிபிள்ளை
　பள்ளிக்குதோழன் பின்னேநடைசூழ்ந்தான்
இப்போஉண்டுயிப்போ போனதம்பிசீராளன்
　என்னசொல்லிநானழைப்பேன் பெண்ணேயென்றான்
அறுக்கப்பொருந்திவந்த அன்பனாரேதொண்டர்
　அழைக்கமதிகள்சற்று மறியாயோ
அச்சுடர்வனத்துக் குள்ளிருந்துவங்க
　ளம்மான்மார்வந்தாரென் றெனவழையும்
அம்மான்மார்வந்தாரென் றெனவழைத்தால்பெண்ணே
　அதிசயமென்னகொண்டு வந்தாரென்பான்
பொன்பெரியபுத்தகங்கள் கொண்டுவந்தாரென்று
　பொன்னாலேயெழுத்தாணி கொண்டுவந்தார்
நீலக்கண்ணாடிகள் கொண்டுவந்தாரென்று
　கோலச்சித்தாடைகள் கொண்டுவந்தாரென்று
தேமாங்கனிப்பழங்கள் கொண்டுவந்தாரென்று
　திருநீற்றுவுண்டைபழம் கொண்டுவந்தார்
இத்தனைகனிவகைச் சித்தாகச்சொல்லி
　எத்திபழைத்தேநீர் வாருமென்றாள்

திருமதுரைப்பள்ளிக்கு சிறுத்தொண்டபத்தன்
சீராளனையழைக்கத் தாவடந்தார்
ஆத்திமரத்தடியில் வீற்றிருக்குஞ்சாமி
அறியாதகுழந்தைமனஞ் சோதிப்பாரும்
அங்குமொருசீராளன் மனமறியவென்று
அனுப்பினார்நித்திரா தேவிதன்னை
நித்திராதேவிவந்து நினைவைக்குலைக்கின்றாள்
நீங்காதசரஸ்வதி விலக்கிடவே
சிந்தைகலங்கிப்பிள்ளை சீராளதேவனும்
சீக்கிரத்தில்வாத்தியாரை தெண்டம்பண்ணான்
ஒருநாளும்வருகாத நித்திரைகள்சாமி
உண்டாகிஐயரிவு மழியுதையா
காலப்பொழுதில்பாலன்னம் பொசித்தல்லோ
காலங்கள்வேறுபட வந்ததினால்
மயக்கங்கள்வந்தாலே சீராளதேவனை
மைந்தர்தோழன்மடியில் பள்ளிகொள்ளும்
பள்ளிக்குப்படிக்கின்ற தோழர்மடியிலே
பாலன்சீராளன் நித்திரைசெய்தான்
நித்திரைமயக்கத்திலே பொல்லாதசொர்ப்பனம்
நின்னையப்படியாகக் கண்டுவிட்டான்
அல்லல்கனவுகண்டு சீராளதேவனும்
அலரிபுலம்பியல்லோ தானெழுந்தான்
பொல்லாதகினவுகண்டு சீராளதேவனும்
புலம்பியலரியல்லோ தானெழுந்தான்
கண்ணீர்ததும்பியொரு கால்கடுங்கமனம்
கைசோரமெய்சோர கலைநிகழ
தூங்கியெழுந்திருந்த சீராளதேவனும்
குருவுடன்வாத்தியாரை சரணம்பண்ணான்
இன்னும்நித்திரைசெய்தால் தம்பிநீசீராளா
பிலக்கும்செந்தாமரைப்போல் முகமிருக்கும்
முகம்வாடப்பட்டதொரு காரணமதுவென்ன
புயங்கள்துடிக்கவந்த விதங்களென்ன
தூங்கினேன்பிள்ளைநான் கண்டகனவெல்லாம்
திடுக்கென்றார்போல சந்தேகந்தோணுதையா
என்னென்னசொற்பனங் கண்டாயோஅப்பா
என்னோடேஒளியாதே சொல்லுமென்றார்
ஆறுபெருகக்கனா கண்டாயோதம்பி
அரசபிலைவிற்கக்கனா கண்டாயோடா
ஏரிபெருகக்கனா கண்டாயோடாதம்பி
எருக்கமிலைவிற்கக்கனா கண்டாயோடா

குளங்கள்நிறையக்கனு கண்டதில்லைசுவாமி
    கொட்டிமுளைக்கக்கனு கண்டதில்லை
தாயார்க்கொருகுறைகள் கண்டதில்லைசுவாமி
    தகப்பனுக்கொருதோஷங் கண்டதில்லை
ஊருக்கொருகுறைகள் கண்டதில்லைசுவாமி
    உந்தனுக்கொருதோஷம் கண்டதில்லை
என்னோடேநான்போகக் கண்டகனவையா
    எனக்கென்னமுடியுமோ நானறியேன்
கன்னிகையாகவே கலியுகந்தன்னிலே
    கனமாயெடுத்து அப்பன் தோளில்வைத்து
என்னையெடுத்து அப்பன் தோளின்மேலேவைத்து
    எழில்பெரியமாளிகைக்கு கொண்டுசென்றார்
எங்கள்மாதாபுலம்பிவந்து எதிரகவாங்கி
    மடிதன்னில்வைத்துப்பால் கொடுக்கக்கண்டேன்
மடியிலிருந்தொரு மைந்தனைகொண்டுசென்று
    மாணிக்கத்தொட்டிலிலே வளர்த்தக்கண்டேன்
காம்பரிந்தஐங்கலப்பூ மல்லிகைமெத்தையின்மேல்
    கைகளெல்லாமடக்கியென்னை வளர்த்தக்கண்டேன்
சந்தனங்கையெனுந் தாசிஒருபுறம்
    தாயாரொருபுறம் தாலாட்டக்கண்டேன்
தாலாட்டும்பிள்ளையைத் தாயாரெடுத்தல்லோ
    தங்கப்பொற்கலலைகயி லிருத்தக்கண்டேன்
தாயாருங்கைகால் பிடிக்கக்கண்டேன்பெற்ற
    தகப்பனார்யென்கழுத்தை யறுக்கக்கண்டேன்
கழுத்தையறுத்து அதில் கழன்றவுதிரத்தை
    கறிசட்டிதனிலேவேறே வறுக்கக்கண்டேன்
உலரஉலரவறுத் ததைசெய்தனில்
    உதிரம்பொரியல்வேறே சமைக்கக்கண்டேன்
உரலிலேதலைபோட்டு துவைக்கக்கண்டேன்தாதி
    உருப்பானமுளைபத்தும் வாங்கக்கண்டேன்
கண்ணுக்கறிவேறே சமைக்கக்கண்டேன்சுவாமி
    காதுக்கறிகள்வேறே பொறிக்கக்கண்டேன்
மூக்குக்கறிகள்வேறே சமைக்கக்கண்டேன்
    நாக்குக்கறிகள்வேறே சமைக்கக்கண்டேன்
பதினொருவிதமாக தலைக்கறியானதை
    பாங்குடனேவேறேதாதி சமைக்கக்கண்டேன்
அறுத்தமுண்டந்தன்னைக் குளிப்பாட்டித்தாயார்
    குழிதானில்தன்னில்வைத்து அவிக்கக்கண்டேன்
கொந்தியகறிதன்னை பிருதாளில்வைத்து
    குலுங்கவேதீமூட்டி அவிக்கக்கண்டேன்



அவித்தமுண்டக்தன்னை யிறக்கியேதாயார்
அருவாயணையில்வைத்து அறியக்கண்டேன்
ஈரல்பிளந்துவேறே சமைக்கக்கண்டேன்சுவாமி
இறைச்சிகள்விதவிதமாய் பொறிக்கக்கண்டேன்
பக்கத்தெலும்புகள் பழுவெலும்பானதை
பதைக்கபதைக்கபிடித் தறுக்கக்கண்டேன்
நெஞ்சுநிணக்குடல் வாங்கக்கண்டேன்
நிணக்குடல்வேறேசட்டி சமைக்கக்கண்டேன்
பொன்பூண்டபார்வையும் நெஞ்சாங்குடலையும்
பொறிக்கறியாகவே சமைக்கக்கண்டேன்
பட்டமிட்டிருந்த சணுக்காலுபட்டிலே
பட்டாடைமேலேவைத்து தரிக்கக்கண்டேன்
மோதிரமிட்டிருந்த முன்னைவிரல்பத்தையும்
முழுமுழுவானதாக பொறிக்கக்கண்டேன்
எண்ணியெண்ணியெல்லாம் யிருபத்தோர் தினுசாக
பலபலவிதமாகச் சமைக்கக்கண்டேன்
பலபலவர்க்கமாகச் சமைக்கக்கண்டேன்
பாண்டத்தில்வேறேசாதம் சமைக்கக்கண்டேன
ஆமைப்பொரியலும் அவட்டலும்துவட்டலும்
பணியாரவிதத்துடன் பலபலவகையும்
உருக்கியநெய்களுடன் பொறிக்கறியாஞ்சுவாமி
உளுந்துவடைகளுடன் மாங்கனியாம்
வருந்திவருந்தியொரு விருந்துக்கோரையமர
பண்டாரந்தன்னைவிட்டி லழைக்கக்கண்டேன்
அய்யரும்உள்ளவந் திருக்கக்கண்டேன்சுவாமி
யெங்களப்பாவுமெதிர்ப்பட்டு வரவுங்கண்டேன்
போதும்போதும்பிள்ளாய்நீ கண்டகனவப்பா
பொல்லாதசொர்பனத்தைக் கண்டாயோடா
நீ கண்டசொற்பனங்கள் நீங்கும்படிக்கல்லவோ
கைலாயத்திருமுறை யோதுமென்றார்
ஆயிரந்திருமுறை யோதினாலுஞ்சுவாமி
அறுக்கத்தவறுமோ சொல்லுமென்றார்
கோடித்திருமுறை யோதினாலுஞ்சுவாமி
என்னைக்கொல்லதவருமோ சொல்லுமென்றார்
ஆனாலும்குருமொழிதவர வொண்ணாதுகாண்
அப்படியேதிருமுறை யோதுவசனே
அறிவோம்அறியவென்று வேதப்பெரும்பாராயணம்
கைலாயத்திருமுறை யோதுவானும்
கைலாயத்திருமுறை யோதுமளவில்
தமிழானசிறுத்தொண்டன் மகனேயென்றான்

தகப்பனைகண்டலவோ தம்பிசீராளனும்
    தன்பள்ளிக்கூடத்திலே போயொளித்தான்
வந்தழைத்தாருசிறுத்தொண்டன் பள்ளிக்கூடந்தேடி
    வாசிக்கும்பிள்ளைகளைத் தானழைத்து
எங்கள்குடிப்பிள்ளை யிங்கில்லையோ தம்பி
    யெங்களுக்குப்பாலகனு ரிங்கில்லையோ
பள்ளியிலேகூடி விளையாடுகிறதம்பி
    பட்சமுடன்தகப்ப னழைக்குகின்றார்
சிந்தைதெளிந்து சீராளதேவனும்
    சீக்கிரத்தில்வாத்தியார்தன் முன்னேவந்தான்
வாத்தியாரைத்தெண்டம் பண்ணுவானும்தம்பி
    தோழமாரையோடிவந்து கட்டுவீரனும்
கள்ளமுண்டோசுவாமி கள்ளமுண்டோவையா
    கண்டகனவிலே கொஞ்சம்பழுதுமுண்டோ
பொய்கள்யிருக்குமோ சொன்னகனவிலே
    தொழுதல்லோயெங்க ளப்பாவந்தாரையா
அழைக்கின்றதகப்பனா ரவர்பின்னேபோனால்
    அடியேன்வந்துன்பாதம் காண்பேனோதான்
முத்துக்கடுக்கன் கழற்றுவானுந்தம்பி
    மோகனமாலைதன்னை வாங்குவானும்
அஷ்டாபரணமெல்லாம் கழற்றுவானும்தம்பி
    அபரஞ்சிமாலைதன்னை வாங்குவானும்
தாளிப்பதக்கங்கள் சரிகைதுப்பட்டாக்கள்
    சந்திராகாரந்தன்னை வாங்குவானும்பத்தன்
பொன்னுபரணங்கள் பட்டாடைகழற்றிப்
    போற்றிசெய்துவாத்தியார்தன் முன்னேவைத்தான்
கண்ணாடிகழட்டியே போய்பத்தெட்டும்
    வாத்தியாருக்குத்தந்தனக்கே சரணமென்றான்
முக்கால்வலம்வந்து சீராளதேவனும்
    முத்தமிழ்வாத்தியார்க்கே தெண்டனிட்டான்
வந்தாலேயிங்குவந்து வாசிக்கிறேனடியேன்
    வருகாமற்போனா லீசன்பதமடைவேன்
சேர்ந்தல்லோநான்காம் பதவிக்கிடசாமி
    தெய்வலோகப்பதவி பெற்றுவாழ்வேன்
தந்தைவந்தழைக்கிறார் வெகுநேரமாயிற்று
    தாமதங்களில்லாமலே சிலவருளும்
அறிவுள்ளசீராளா உன்னைப்போல்கள்விகள்
    ஆயிரம்பிள்ளைகளில் நானறியேன்
அறியென்றசொல்லுக்கு சொன்னதேயல்லாமல்
    ஆயிரஞ்சுருதிநூல் நீபடித்தாய்

ஆயிரம்பிள்ளைகட்கு நீயே தலைவனாய்
ஐயருக்கொருகுறைவு வாராமலே
குறைவில்லாபாக்கியங்கள் எனக்களித்துத் தம்பி
கூடியிருந்து பாலடிசிலுண்டு
விட்டுப்பிரியவல்லோ சீராளதேவா நீ
வேறானசொற்பனங்கள் கண்டுசொன்னாய்
அறியாதான்கண்டகனா சீராளதேவா நான்
அசலார்க்குத்தாங்குமென்றே நானிருந்தேன்
பாலன்கண்டகனா சீராளதேவா நான்
பலபேர்க்குச்சாயுமென்றே நானிருந்தேன்
நீகண்டசொற்பனங்க ளெனக்கேபலித்தது
நிமலனுடசிவன்செய லென்னமோதான்
ஆரைச்சதமென்பேன் சீராளதேவா
அன்னியரைத்தஞ்சமென்று நான்வளைப்பேன்
எவரைச்சதமென்பேன் சீராளதேவா
இனியாரைத்தஞ்சமென்று நான்வளைப்பேன்
போனீரோ என்னைவிட்டு சீராளதேவா தம்பி
புண்ணியவானேநா னென்னசெய்வேன்

சீராளதேவன் வாத்தியார்க்கு மனந்தேறச் சொல்லல்.

தங்கள்மனதிலென்ன சுவாமியுனக்கையா
தலைமுறைமூன்றுக்குந் தனமிருக்க
எங்கியிருக்கவேண்டாம் என்தலைவிதியைத்தான்
எவரால்விலக்கவசஞ் சொல்லுமையா
என்னையறுத்துக்கறி சமைத்து ஆண்டிக்கிடவே
ஆதிசிவன் விதிப்படியானால்
உன்னாலுமென்னாலு மாவதுண்டோசுவாமி
ஊழ்வினைப் பயன்றனைவிலக்கவென்றால்
மண்டையிலேஎழுதி மயிராலமறைத்தல்லோ
வைத்தாரோஎன்னுடைய தலைவிதியை
மண்ணோடேமண்ணாக மறைந்துவிடுந்தேகம்
வளர்கின்றஅக்கினியா லெரிந்துவிடும்
காக்காய்கழுகுகள் நாய்கரிபுழுக்களும்
கலந்துபிடுங்குமந்த தேகந்தன்னை
வீணாகப்போகாம லுனக்குதவியாக
விருந்துக்குவுபயோக மாயிருந்தேன்
கழுத்தையறுக்கவர் வருகின்றவேளையிலே
கர்த்தாவைநினைத்தொரு மந்திரஞ்சொல்லும்
சத்திமுத்திலும் நமசிவாயவென்னும்
பத்திமுத்திலும் நமசிவாயவென்னும்
ஐந்தெழுத்துமந்திரத்தை நெஞ்சில்தியானித்தால்

அதிலுள்ளகர்மமெல்லா மகன்றுவிடும்
அருளருளும்தேவா அப்படியாகுதென்று
ஐயருக்குதீர்க்கநமஸ் காரஞ்செய்தான்
சீராளதேவன் தோழன்மாருக்குப் புத்திகூறி
வாத்தியாரைத்தெண்டஞ் செய்தல்லவோதம்பி
தோழன்மாரைஓடிவந்து கட்டிக்கொள்வான்
என்னுடன்வாசிக்கின்ற தோழன்மாரேதம்பி
ஏழையல்லோநம்பிட குருக்களையர்
பள்ளிக்கூடங்களையாமல் கற்றுக்கொள்ளுங்கள்தம்பி
சனியெண்ணெய்வரட்டி தண்டிக்கொடுங்கள்
மாதம்வரிப்பணம் தண்டிக்கொடுங்கள்
வரவுஅரிசிப்படி தான்கொடுங்கள்
நவமிக்கொருதரம் ஐயருக்கும்பொன்பணம்
நலமாகத்தான்கொடுத்துக் காத்திடுங்கள்
நானிருந்தபாவனையாய் நீங்களிருங்கள்தம்பி
அரியென்றவாத்தியாருக்குத் தடைசொல்லாமல்

### சீராளன் வாத்தியார் பிள்ளைகளிடத்தில் செலவுபெற்று தன்மடத்துக்கு வருகிறது.

ஐயருக்கும்பிள்ளைகட்கும் ஆறுதலைசொல்லி
ஐயனார்முன்னேவந்து தெண்டஞ்செய்தார்
தன்னைபெற்றதகப்பனார் முன்னேவந்துசீராளன்
தயவுடனேயவ னேதுசொல்வான்
வழியிலேகல்லுமுள்ளு மில்லுகள்கண்டாலென்
உள்ளங்கால்முள்ளோடு தைக்குமென்றார்
உள்ளங்கால்முள்ளோடு தைத்ததுயாமானால்
உதிரங்கள்மிகுதியாய் சொரிந்திடுமே
வுதிரங்கள்மிகுதியாய் சொரிந்ததேயாமானால்
உண்ணாரேஐயர்வுந்தன் மடந்தனிலே
என்னையெடுத்துவுந்தன் தோளின்மேலேவைத்து
எழில்பெரியமாளிகைக்கு நடவுமென்றான்
சிறியவர்சொல்லும்புத்தி நிசமென்றுளெண்ணியே
பெரியவர்தோளின்மே லெடுத்துக்கொண்டார்
பெரியவர்தோளின்மேலே யெடுக்கும்பொழுது
பெருகுஞ்சனையில்தாயார் முழுகுவாளாம்
வெள்ளையாலிவஸ்திரத்தை கட்டுவாளாம்நங்கை
மெய்யானபுஷ்பங்களை முடித்துக்கொள்வாள்

### திருவெண்காட்டுநங்கை சிறுத்தொண்டபத்தனையும் சீராளதேவனையும் காணாமல்வருந்துதல்.

அப்பன்வருகின்ற வழிக்குமுன்பாகவந்து
ஆலோசனைகள்செய்து ஏதுசொல்வாள்

பிள்ளையழைக்கபோன சிறுத்தொண்டனாரை
யின்னம்வரக்காணேன் என்செய்வேனென்பாள்
கத்தியிருந்திங்கே உலாவுதென்பாள்நங்கை
கறிக்கூட்டுவர்க்கமெல்லாம் புளிக்குதென்பாள்
ஆத்தியடிதனில் வீற்றிருக்குமையர்
அவர்பசியாலென்னசாபந் தருவாரோவென்பாள்
பள்ளிக்கூடம்நோக்கி வெண்காட்டுநங்கைதானும்
பாலகனைப்பார்த்து தானழைப்பாள்
நான்பெற்றமகனாரே வாராயோடாதம்பி
நல்லறிவுசீராளதேவா வாராயோடா
பள்ளிக்குப்பிள்ளைபேரீ வாராயோடாதம்பி
பாலகன்சீராளதேவா வாராயோடா
கூவியழைக்கும்போது வெண்காட்டுநங்கைதானும்
கொப்பெனசிறுத்தொண்டன் முன்னேவாரான்
தாயாரழைக்குஞ்சத்தம் தனைக்கேட்டுசீராளன்
தகப்பன்தோள்மீதிலிருந்து யேதுசொல்வான்
வந்தேனம்மாபிள்ளை வந்தேனம்மாதாயே
வருந்தாதேவிருந்திட வாருமென்றான்
வந்ததொருபிள்ளைதன்னை யிங்கழைத்துதாயார்
வர்ணமடியிள்வைத்து பால்கொடுத்தாள்

திருவெண்காட்டுநங்கை சீராளனைக்குளிப்பாட்டி
தொட்டிலில்வைத்து தாலாட்டுதல்.

வர்ணமடியில்வைத்து பால்கொடுத்துப்பிள்ளையை
மஞ்சள்நீர்ச்சாலைக்குக் கொண்டுசென்றார்
சம்பங்கியெண்ணைகொண்டு தாயுந்தகப்பனும்
தளரவேகூந்தல்கோதி காப்புமிட்டார்
பூவாசனையெண்ணையும் மணமெண்ணையுங்கொட்டி
பிள்ளைப்பூமுடிக்குமவர் காப்புமிட்டார்
சீவக்காய்நெல்லியுடன் சிருபருப்புங்கஸ்தூரி
சீராகப்பிள்ளை தலைக் கள்ளிதெளித்தார்கள்
வெந்நீர்விளாவிசிறுத் தொண்டன்தெளிக்கவே
வெண்காட்டுநங்கையம்மை தலைகோத
தாயுந்தகப்பனுமா முழுக்காட்டிபிள்ளைதன்னை
சரிகைதுப்பட்டாகொண்டு தலைதுவட்டி
நெற்றிக்குநெற்றிபட்டங் கட்டுவாளாந்தாயார்
நேர்விழிக்குமையெழுதி பொட்டுமிட்டாள்
முத்துக்கடுக்கனைப் போடுவாளாந்தாயார்
மோகனமாலைதன்னைப் பூட்டுவாளாம்
அஸ்தகடகங்கள் போடுவாளாந்தாயார்
அபரஞ்சிமாலைதன்னை பூட்டுவாளாம்

தாளிப்பதக்கங்களைப் பூட்டுவாளாந்தாயார்
சந்திரபிறைசூரியபிறை தரிப்பாளாம்
பொன்னாபரணமெல்லாம் பூட்டுவாளாந்தாயார்
பிள்ளைமுகத்தையுற்று பார்ப்பாளாம்
தாயார்முகத்தையுற்றுப் பார்த்துநகைத்தல்லோ
சந்தோஷத்துடன்பிள்ளை யேதுசொல்லும்
இத்தனையும்வேண்டுமோ மாதாவேயிப்பொழுது
இறந்துபோகும்பிள்ளை யெந்தனுக்கு
மதிக்கிறேனென்றுசொல்லி மயங்காதேமகனேநீ
அறிந்தவயணந்தன்னைச் சொல்லாயோடா
சிறிப்பேனழுவேனென்று சொல்லலந்தாயேநீ
தெய்வங்களுநீங்களு முளவானால்
அப்பாடா அப்பாவென்று அழுதாலேயப்பன்
கழுத்தறுக்கக்கத்திதன்னைத் தீட்டுவாறே
அம்மாடி அம்மாவென்று அழுதாலேயம்மா
வாயில்ஸ்தனத்தைக் கொடுத்துவைப்பாய்
தெய்வமேதெய்வமென்று அழுதாலேயென்னை
அறுத்திடத்தின்னவந்த தெய்வந்தானே
ஆரைநினைத்தழுவேன் சொல்லுமம்மா தாயே
ஆயுசுமுடிந்தது சரியானால்
ஆத்தாளைசதமென்றால் அறைகுறைதீருமென்று
அதினால்சிரித்தேனென்னைப் பெற்றதாயே
சீராளனுரைகேட்டு திருவெண்காட்டுநங்கை
சிரித்துத்தன்மகனுடனேதுசொல்வாள்
கற்றதொருகல்விகளைப் பேசாதேயென்மகனே
காத்திருக்கிறாரையர் பசியுடனே
இந்நாளுமழலைச்சொல் கேட்டிருப்பேன்மகனே
இன்றைக்குநேரமில்லை நித்திரைசெய்யும்
தூங்குதூங்குமகனே யென்றவள்தொட்டிலிலே
சொற்பெரியதொட்டிலிலே வளர்த்துவாராம்
காம்பரிந்தஜலங்கல மல்லிகைமெத்தையின்மேல்
கால்கோட்டைகைகோட்டை திண்டுமிட்டாள்
மல்லிகைமெத்தையின்மேல் மைந்தன்சீராளன்
மாதாவளர்த்தியே தாலாட்டலுற்றாள்
சந்தனநங்கையென்னும் தாதியொருபுறம்
தாயாரொருபுறந் தாலாட்டுகின்றார்
நித்திரைபோமகனே நித்திரைபோ அப்பா
சித்திரைபொன்தொட்டிலிலே நித்திரைபோ
கட்டிக்கரும்பேநீ நித்திரைபோமகனே
கணுவில்லாச்செங்கரும்பே நித்திரைபோ

வேலிக்கரும்பேநீ நித்திரைபோமகனே
    விடாய்தீர்க்குஞ்செங்கரும்பே நித்திரைபோ
பிள்ளையில்லையென்றுசொல்லி தில்லைவனம்போய்முழுகி
    போதத்தவமிருந்த வென்மகனே
மைந்தனில்லையென்றுசொல்லி வானவரைதானேக்கி
    வருந்திதவமிருந்தே யென்மகனே
மழைமாரிபோல்வந்து வயிற்றிலவதரித்தல்லோ
    மைந்தனெனவந்துகுறை தீர்த்தோனே
கொடிமாசிபோலேயல்லோ வயிற்றில்தரித்துநீ
    கொஞ்சியேகவ்வியெல்லாம் தீர்த்தவனே
பிள்ளைகலியெனக்கு தீர்க்கவந்தோனேயென்
    பெருமானே நித்திரைபோடா
மைந்தன்கலியெனக்கு தீர்க்கவந்தோனேயென்
    மகனேசீநித்திரைபோ கண்மணியே
வண்டினங்கள்பாட மரங்களிலேசோர
    வாழுமன்னங்களது கவிபூட்ட
மாடப்புறக்களும் மயிலுமொருபுறம்
    மைந்தன்சீராளனுக்குத் தாலாட்ட
தாலாட்ட தாலாட்ட சீராளதேவனுக்கு
    தாங்குகண்ணுநித்திரைகள் வாராமல்
ஆதிசிவன்றன்னை அறிவில்நினைத்தல்லோ
    அன்பன்சீராளதேவ னேதுசொல்வான்
நித்திரைவாராமல் வீற்றிருக்கறான்
    நீங்களும்பசியுடன் காத்திருக்க
அறுத்துக்கறிசமைக்க சமயங்களில்லாமல்
    ஆச்சிமாரிருந்தவர் தாலாட்டிருக்க
பாவங்கள்வந்தணுகாமல் தவங்கள்வந்தணுகவே
    பாருங்கிருபைசெய்யும் பரமசங்கமரே
அறியும்பொழுதும்யெம வாதனையில்லாமல்
    அந்நேரங்காலனை தியானஞ்செய்தார்
ஈசனைநினைந்துயிரு கண்களைமூடி
    இருக்கின்றனேநித்திரை வந்தவன்போல்

சிறுத்தொண்டபத்தனும் திருவெண்காட்டுநங்கையும்
சீராளனை அறுக்கின்றது.

சந்தனப்பலகையை தாழவைத்து அன்பன்
    சதிருடனேகத்தியைத் தீட்டுவானும்
குங்குமப்பலகையை தாழவைத்து அன்பன்
    குளிரக்குளிரக்கத்தி தீட்டுவானும்
கத்தியிழையைத்தீட்டி கையிற்பிடித்தானே
    கண்காட்டிவெண்காட்டா ளென்னசெய்தாள்



மைந்தனைவாரியவள் மார்போடணைத்துவந்து
    மாணிக்கபீடத்திலே வளர்த்தினளே
பொற்பலகைமீதி லிருத்திவைத்துத்தாயார்
    பிளாமல்காலுங்கையு மேபிடித்தாள்
கர்த்தனைநினைத்தல்லோ கத்தியெடுத்துபத்தன்
    கழுத்தைதபறுக்கமனந் தான்துணிந்தான்
தாயாருங்கைகாலும் பிடிக்கவேபெற்ற
    தகப்பனுங்கழுத்தை யறுப்பானும்
ஸ்ரீ அரிராமாவென்று சொல்சிசீராளன்
    ஊட்டியிலேகத்தி நாட்டுவாரும்
அப்போதுசீராளன் அறிவுள்ளபாலகன்
    அன்போடுதன்மனதி லென்னசொல்வான்
கத்தியோடிகழுத்திலே தாக்குமளவிலே
    பத்திமுத்திஓம்நமசி வாயாவென்பான்
பத்திமுத்திஓம்நமசி வாயாவென்றுஞ்பிள்ளை
    உண்டபாலுதிரமாய் சொரிந்திடுமாம்
பால்வாயைக்கண்டல்லோ சிறுத்தொண்டபத்தன்
    உதறிகைகத்தியை மெள்ளசோர்விட்டான்
என்றுதான்பெற்ற மகனேமகனேயென்று
    சிறுத்தொண்டபத்தனும் புலம்புவானும்
எட்டென்றுல்ரெண்டுமினி யறியாதபாலகனை
    ஏட்டிலெழுதிவைத்துப் பார்த்ததில்லே
பத்தென்றல்ரெண்டுமினி யறியாதபாலகனை
    படத்திலெழுதிவைத்துப் பார்த்ததில்லே
புலம்பும்புருஷனைக்கண்டு திருவெண்காட்டாள்
    புத்திமதிகள்திட மேதுசொல்வாள்
தலையறுந்துகட்டை தாழவிழப்போகுது
    தவறுமலஙங்காணும் பிள்ளைதலையை
தூக்கிப்பிடித்தவொரு தலைதனிலேயின்னங்
    கொண்டதவங்களது குறையாமல்
தாயாருங்கைகாலும் பிடிக்கவேபெற்ற
    தகப்பனுங்கழுத்தை யறுப்பாரும்
கழுத்தையறுத்து கழன்றவுதிரத்தை
    கறிசட்டிதனில்வேறே வாங்குவாளாம்
எடுத்தபணியாரம் பொறியல்சமைத்தல்லோ
    இடவந்தபெருஞ்சட்டியி லிறக்கிவைந்தாள்
சீராளதேவன்தாதியை தலைக்கறிசமைக்கச்சொன்னது.
வாடிமகளாரே சந்தனநங்கையே
    தலையைத்தான்கொண்டுபோய் புதைத்துவாடி
மறந்தானேசிறுத்தொண்டன் சொன்னசொல்தனை
    மகாதேவாட்சணமே யேதுசொல்வார்

சிரந்தனைக்கரங்கொண்டு சென்றதொருதாதிக்கு
சிராளன்வாய்திறந் தேதுசொல்வான்
தாயுந்தகப்பனுக்கு மறதிகளுண்டானால்
தாதியுனக்குமதி கெட்டுதோடி
எண்சாணுடம்புக்கு சிரசேபிரதானம்
இத்தைமறியார்கள் மானிடர்கள்
சொல்லப்பட்ட திருநாவு யிங்கிருக்கதாயே
சுகமறியாமூக்குக ளிங்கிருக்க
கேள்விப்பட்ட திருச்செவி யிங்கிருக்கதாயே
எப்படிக்குநீபுதைக்கப் போறாயம்மா
நாகமல்லோமுண்டம் நாறுமுடலை.
நாதர்பொசிப்பதில்லை தாதியென்றான்
சமைத்துவைத்தாயானால் தாதியுனக்கு
சாகாமல்குருபாதம் வரமளிப்பார்
அருளருளுந்தம்பி அப்படிநான்செய்வேன்
அந்நேரம்சந்தன நங்கையவள்
உரலிலேதலைபோட்டு துவைப்பாளாந்தாதி
உருப்பானமூளைபத்து வாங்குவாளாம்
கண்ணுக்கறிகள்வேறே பொறிப்பாளாந்தாதி
காதுக்கறிகள்வேறே சமைப்பாளாம்
அறுத்தமுண்டந்தன்னை முழுகிக்குளிப்பாட்டி
அவிக்கவென்றேயிருவ ரெடுத்துவந்தார்
கொத்திக்கிளறியே கொந்தாளில்வைத்து
குறுகவேதீமூட்டி அவிப்பாளாம்
அவித்தமுண்டந்தன்னை யிறக்கியேதாயார்
அரிவாமணையில்வைத்து அரிவாளாம்
ஈரல்பிளந்துவேறே சமைப்பாளம்மாள்
இறைச்சிவிதவிதமாய்ப் பொறிப்பாளாம்
பக்கத்தெலும்புகள் பழுவெலும்பானதை
பதைக்கப்பதைக்கப் பிடித்தறுப்பாளாம்
நெஞ்சடிநிணைக்குடல் வாங்குவாளாமம்மா
நிணக்குடலொருசட்டி வாங்குவாளாம்
பொன்பூண்டமார்பையும் நெஞ்சாங்குடலையும்
பொறிக்கறியாகவே சமைப்பாளாம்
மார்புசதைகள்வேறே வாங்குவாளாமம்மாள்
வலதுதுடைகள்வேறே பொர்றிப்பாளாம்
பாடகமிட்டதொரு கணுக்கால்மட்டிலே
பட்டாடைமேலேவைத்து தரிப்பாளாம்
முழங்காலெலும்புகள் முதுகெலும்புகளெல்லாம்
மிளகுநீராகவே வைப்பாளாம்

கணுக்காலெலும்புகள் கணுவெலும்பெல்லாம்
    கமுகமுவர்ணமாகப் பொரிப்பாளாம்
எண்ணியெண்ணியல்லோ இருபத்தொருவிதமாய்
    பலபலவர்ணமாக சமைப்பாளாம்
பலபலவாகக்கறி சமைப்பாளாம்மூன்று
    பாண்டத்தில்வேறேசாதம் சமைப்பாளாம்
ஆமல்பொரியலும் அவிட்டலும்துவட்டலும்
    பணியாரவிதத்துடன் பலவகையும்
புத்துருக்குநெய்யுருக்கிக் காச்சிவைத்தாளம்மாள்
    •போதவேசங்கமரை கூட்டிவாவென்றாள்
காராவின்நெய்யுருக்கிக் காய்ச்சிவைத்தாளம்மாள்
    கடிகியேசங்கமரை அழையுமென்றாள்
இந்நேரம்சங்கமரும் இளைப்போடிருக்கிறார்
    இட்சணமேசங்கமரை கூட்டிவாவென்றாள்
ஒருசுற்றுவேஷ்டியுந் தரிப்பானும்பத்தன்
    ஒருபக்கம்பூநூலும் போடுவானும்
திருவெண்ணீரஞ்செழுத்தை ஓதுவானும்பத்தன்
    திவ்வியமனதடக்கி துதிப்பானும்
திருக்கொன்றைமாலையொன்று மார்பில்அசையவே
    திருவாத்திதிசைநோக்கி நடப்பானும்

## சிறுத்தொண்டபத்தன் சுவாமியாகிய பண்டாரத்தைக் காணுதல்.

திருவாத்திமரந்தன்னைத் தேடிவந்துபத்தன்
    தெண்டநமஸ்காரஞ் செய்குவானும்
ஆத்திமரந்தன்னைத் தேடிவந்துபத்தன்
    அடியேன்நமஸ்காரம் போற்றிநின்றான்
ஆதியேஉன்பாதம் போற்றிபோற்றிசிவனே
    அம்பலவாணரே போற்றிஐயா
சோதியேஉன்பாதம் போற்றிபோற்றிசிவனே
    சிதம்பரதேவனுமே போற்றிஐயா
ஆச்சுதுபோசனங்க ளப்பனுமேசிவனே
    அமுதுண்ணுமடத்துக்கு வாருமையா
போற்றியிடுகிற சத்தந்தன்னைக்கேட்டு
    புலிமுகவாண்ணர் முகம்பார்த்தார்
அழுதகள்ளாதொழுதகள்ளா யெழுந்திரடாபத்தா
    ஆசாரக்கள்ளனு மெழுந்திருடா
கும்பிடும்கள்ளாநீ யெழுந்திரும்பத்தா
    குலைழத்திடுங்கள்ளனுமே யெழுந்திரும்பத்தா
அன்புள்ளகள்ளாநீ யெழுந்திரும்பத்தா
    ஆசாரக்கள்ளாநீ யெழுந்திருடாபத்தா

உச்சிக்குமுன்னாலே அமுதுபடைப்பேனென்று
சத்தியமாய்முகந்துநீர் தாரைவார்த்தாய்
உச்சிக்கியோரடிதாழ்ந்து போச்சுதுபத்தா
உண்ணேனோடாபத்தா உன்மனையிடத்தில்
உனக்கண்டைவீட்டுக்கார பத்தனொருவன்
அமுதுக்குவரச்சொன்னா னங்கேபோறேன்
மேலண்டைதெருவிலே பத்தனொருவன்
விபூதியையும்கெவிடு தருவேனென்றான்
இன்பமானபடிக்கி யிருந்தானொருவன்
இளைப்பாறிவந்தமர்ந்தே னப்பாவென்றார்
இப்படிக்குதேவர்சொன்னா லேழைநானென்செய்வேன்
என்னாலேகுற்றமொன்றும் வருவதில்லை
போகவும்சென்றுதையா சிலநேரம்பிள்ளையை
அழைக்கவும்சென்றுதையா சிலநேரம்
அழைக்கவும்சென்றுதையா சிலநேரம்பிள்ளையை
அறுக்கவும்சென்றுதையா சிலநேரம்
அறுக்கவும்சென்றுதையா சிலநேரம்கறி
யறியவும்சென்றுதையா சிலநேரம்
அறியவுஞ்சென்றுதையா சிலநேரம்கறி
சமைக்கவுஞ்சென்றுதையா சிலநேரம்
கறிசமைக்கவும்சென்றுதையா சிலநேரம்இங்கே
வருக்கவும்சென்றுதையா சிலநேரம்
அத்தாலேகுற்றமில்லை தம்பிரானேசிவனே
அடியேன்மடத்துக்கு தேவரீர்வாருமையா
பிள்ளையறுத்துக்கறி சமைத்தாலென்னபத்தாவுன்
பெண்சாதிநீயுமாய் கொள்ளுமென்றார்
இப்போவொருவன்வந்து போசனம்சொன்னான்
இதோபோறேனவனுட மாளிகைக்கு
பொய்யன்கள்ளன்சூதன் நீதான்பத்தா
யெழுந்திருயிந்த யிடத்தைவிட்டு
பொய்யன்கள்ளன்சூத னானல்லசுவாமி
போசனங்களுண்ணு தற்குவாருமையா
ஆறுகுற்றம்நூறுபிழை அடியேன்செய்தாலும்
ஐயாமனம்பொருத்து எழுந்தருளும்
இந்நேரம்தேவரீர்மெத்த யிளப்போடிருக்கிறீர்
எழுந்திருந்தேவமு துண்பதற்கு
ஐயர்தன்மனமிரங்கி சிறுத்தொண்டபத்தனே
ஆசனத்தைபெட்டா வாரேனென்றார்
இதுநல்லதருணங்க ளாச்சுதென்று
பெடுத்தார்புலித்தோ லாசனத்தை

ஆசனத்தோல்போட்டு ஆத்திமரம்விட்டார்
அண்டர்முனிவர்தேவர் கொண்டாட
இத்தெருவுகோடியிலே வருவனோடாபத்தா
அத்தெருவுகோடியிலே வருவனோடாபத்தா
இச்சையானவீதியிலே பித்தனோசிவனே
யெழுந்தருளும்தேவரே வாருமையா
திருமதுரைவீதியி லுள்ளோர்மனமறிய
வேணுமென்றுதிரும்பினார் சங்கமரும்
கலீல்கலீலென்று நடப்பாராமையர்
கால்பிணிநூல்பிணி வாராமலே
ஆடியடமாகஞ் சாடிப்பாராமையர்
அண்டரண்டபுவனங்க ளதிர்ந்திடவே
திருக்கையில்டமாகம் சாடிப்பாராமையர்
தேவாதிதேவரெல்லாம் திடுக்கிடவே
திருவடிக்கமலமும் திருச்சிலம்போசையும்
கையினில்சூல கபாலமுமே
கையில்பிரமகபாலந் தன்னையேந்தி
கயிலாசநாதர் பிச்சைகேட்பாராம்
ஓலைக்கடன்முறி கிழிப்பாருண்டோவுலகில்
உத்தமதானதருமஞ் செய்வாருண்டோ
கூலிக்குகுத்தியன்னங் கொடுப்பாருண்டோ
கோட்டைநூற்றன்னதானங் கொடுப்பாருண்டோ
தாலிவிற்றன்னதானங் கொடுப்பாருண்டோவுலகில்
சதானித்தமன்னதானங் கொடுப்பாருண்டோ
கைலாசநாதர்பிச்சை கேட்குமளவிலே
கண்டார்கள்திருமதுரை வீதியிலுள்ளோர்
பிள்ளைதின்னுமாண்டி வாரானென்பார்சிலபேர்
பிணந்தின்னும்பித்தனிவர் வாரானென்பார்
மைந்தன்தின்னுமாண்டி வாரானென்பார்சிலபேர்
மருளனவன்பித்தனிவன் வாரானென்பார்
தன்பிள்ளைஅசல்பிள்ளையை மரிப்பாருஞ்சிலபேர்
தலைவாசல்கதவோடி அடைப்பாராம்
தங்கள்தங்கள்பிள்ளையை தாங்களெடுத்துவந்து
தலைக்கடையாலும் பிழக்கடையாலும்
இவர்கள்மனஞ்சோதிக்க யீஸ்வரனார்தான்கண்டு
எண்ணரூபங்கொண்டா ரந்நேரம்
தலைக்கடையிலொரு ஆண்டியானார்சிவனும்
புறக்கடைக்கங்கேயொரு ஆண்டியானார்
நாலைந்துபிள்ளையெனக்கு ஆதாரஞ்சந்தாலே
நான்போவேனிவ்விடம்விட்டு தம்பிரானும்

தலைக்கடையிலொருவர்வந்து ஆரையாவென்றான்
  தம்பிரான்பிள்ளைதின்ன வந்தேனென்றார்
பின்னுங்கதவடைத்து பேசாமலிவர்கள்
  புறக்கடையிலொருவன்வந்து ஆரையாவென்றார்
பிள்ளைதின்னுமாண்டியிங்கே வந்தேனோடாபத்தா
  பேசாதேமூன்றுபிள்ளை வேணுமேடா
பொல்லாதகாலங்கள் சொல்லாதேவந்துதென்று
  பேசாதேகதவடைத்துத் தானிருந்தார்
பிள்ளைதின்னுமாண்டியென்றும் பிணந்தின்னும்பித்தனென்று
  பேப்கள்பினத்துதே சுவாமியைக்கண்டு
நெற்றிக்கண்ணாலேகடைப் பார்வையானார்சுவாமி
  நீராகப்போச்சுதாங் திருமதுரை
திருமதுரைவீதியெல்லாம் நெருப்பாயெரித்து
  திரும்பினார்சிறுத்தொண்டன் வீதியிலே
மஞ்சள்பிளந்துவாழை கட்டுவாராஞ்சிலபேர்
  மடந்தன்னில்வந்துதோரணங் கட்டுவாராம்
இஞ்சிபிளந்துவாழை நாட்டுவாராஞ்சிலபேர்
  எலுமிச்சைத்தோரணங் கட்டுவாராம்
தண்ணீர்தெளித்து தரைகோலங்களிட்டு
  சாம்பிராணிதூபங்கொண்டு வருவாராம்
அரசிலைதோரணங் கட்டுவாராஞ்சிலபேர்
  ஐயர்க்குத்தூபங்கொண்டு போடுவாராம்
வெண்காட்டம்மன்வந்து பாதஞ்சொரியஅப்போ
  சிறுத்தொண்டபத்தன்வந்து பாதஞ்சொரிய
மல்லிகைமுல்லை யிருவாட்சியுடனே
  மருக்கொழுந்துமாக சாற்றுவாராம்
கோங்குகுடமல்லிகை சாற்றுவாராமன்பன்
  கொத்தோடேசெவ்வந்திப்பூ அணிகுவாராம்
பாதமதையர்ச்சித்து ஐயரைக்கூட்டியே
  பதினெட்டாங்கட்டுக்குள்ளே யிட்டுவந்தார்
தங்கப்பொற்பலகையுந் தான்பலவணித்தான்
  தள்ளிவிட்டார்சுவாமி காலாலே
புலித்தோலாசனத்தைப் போட்டமர்ந்துசுவாமி
  பொக்கணத்தைக்கழட்டி பக்கம்வைத்தார்
ஆசனத்தைப்போட்டு தானமர்ந்தார்சுவாமி
  அண்டையிலேதிருவோடு மாத்திரையும்
தலைவாழையிலைகொண்டு மூன்றிலைபோட்டு
  தண்ணீர்தெளித்தெதிரே நில்லுமென்றார்
தெரியவுரைக்கிறேன் சிறுத்தொண்டபத்தாவெனக்கு
  தேவியரிருவருண்டு பொல்லாதிவர்



மூத்தபிள்ளையொருவன் பார்த்திருக்கும்வழியை
    முன்னாலேவருகுமே யதுக்கிளையபிள்ளை
பொல்லாதபிள்ளை யெனக்கொருவனுண்டு
    போடடா அதுக்கொரு யிலையுமென்றார்
உன்பிள்ளையைக்கொன்ற தொருதோஷந்தீர
    சாத்திரியொருவன் வேணுமென்றார்
அதிதிக்கும்ஆயிரம்பேர் கன்னக்கொடுப்பேன்
    அரிதாச்சு இன்றைக்கு ஒருவரென்றார்
எங்கெங்குந்தேடிவந்தேன் சங்கமரைக்காணாமல்
    இருந்தீரொருவரிங்கே ஈஸ்பரன்போல்
நானென்னபலதோஷம் செய்தேனோசுவாமி
    நங்கையென்னபாவதோஷங்கள் செய்தாளோதான்
யாருமகப்படாமல் போனதினால்சுவாமி
    யாதரிக்கநீரொருவர் வந்ததினால்
உன்னைவிடவெனக்கு வேறொருதெய்வ
    முண்டோயெனக்குசுவாமி மண்டலத்தில்
ஆருக்கொருபண்டாரங் களகப்பட்டார்களேயென்றீர்
    அமரடாநீயாகிலும் பக்கம்வந்து
தன்பிள்ளைக்கறியைத்தான் பொசிப்பானோவென்று
    சுவாமியவள்மனதை சோதிக்கின்றார்
அப்படியானால் பொசிக்கிறேனென்று
    அமர்ந்தானே ஐயருட பக்கலிலே
ஐயருக்கோரிலை அஞ்சிலையும்போட்டு
    ஐயருடமுன்னாலே நங்கைசொல்வாள்
உண்ணவுண்ணபடைக்கட்டோ பண்டாரமேசிவனே
    ஒருமட்டாய்க்கொண்டுவந்து படைக்கட்டோ
ஒருக்காலேகொண்டுபடையாமோ தாயேயெங்கள்
    தம்பிராட்டியம்மனுக்கு பூசையாக
உண்டானசோறுவகை கறிவகையத்தனையும்
    ஒருமட்டாய்கொண்டுவந்து படையுமென்றார்
சமைத்தகறிவகைக டன்னமூந்தானே
    தாங்காமல்கொண்டுவந்து படைக்கின்றார்
சிவிசாண்டி அம்மாள் பற்றொன்றுமில்லாமல்
    சேரவேதான்படைத்தா ளிலைதனிலே
இம்மட்டோதாயே இன்னமுண்டோசொல்லும்
    எங்கள்குலதேவதைக்கு பூசையாக
பாண்டத்திலசலம்விட்டு பத்தில்லாமற்கழுவி
    பாத்திரத்தில்கொண்டுவந்து வாருமென்றார்
அப்படியேகொண்டுவந்து படைத்தேன்காண்சுவாமி
    அமுதுண்ணுந்தேவாபசி யாயிருக்கிறீர்

உன்னைநம்பலாமோடா சிறுத்தொண்டபத்தா
 உன்பெண்சாதியையெள்ளளவும் நம்பொணாது
ஒருபந்தியிலிரு வஞ்சனைசெய்தாளடா
 உற்றுப்பாரடாபத்தா வென்னிலையை
தலைக்கறிகளெல்லாம் உனக்குவைத்தாள்பத்தா
 நாரும்நரம்புமாக வெனக்குவைத்தாள்
வேரும்விறகுமாக யெனக்குவைத்தாள்பத்தா
 வேறேகறிகளெல்லாம் உனக்குவைத்தாள்
உற்றமனுஷனென்று சொல்லிவுன்பெண்சாதி
 உள்ளகறிகளெல்லாம் உனக்குவைத்தாள்
வஞ்சனைகள்சூதுபொய்க ளொருக்காலும்வாராது
 மகாதேவரே அன்னங் கொள்ளுமென்றார்
மாமிஸமானதெல்லாம் உனக்கேவைத்தாள்பத்தா
 முட்டியெலும்பெல்லாம் யெனக்கேவைத்தாள்
இச்சையிருந்ததே யாமானால்தேவா
 இந்தயிலைசாதங்கூட வுண்ணுமென்றார்
உண்ணுமென்றுபசாரஞ் சொல்லாதேபத்தா
 உன்னிலைச்சாதங்கூட எனக்குணவயும்
அப்படியாகுமென்று அன்பநிலையையும்
 ஐயருடன்முன்னா விழுத்துவந்தான்
கைகட்டிமுன்னாலே போற்றிநின்றானன்பன்
 கண்டல்லோசங்கமரு மனமகிழ்ந்தார்
பூசையில்தூபதீப மானதேயாமானால்
 பிர்மகொலைபிர்மஹத்தி சுத்துமென்றார்
தந்திரவார்த்தைசொல்லி தம்பிரானுமப்போ
 தன்னுடயெதிரேவந்து நில்லுமென்றார்
இளப்பாயிருக்கிறீர் தம்பிரானேசிவனே
 இங்கேசந்தேவரமுது கொள்ளுமென்றார்
தாம்பூலதட்சணைகள் வையடாபத்தா
 சாம்ள்ராணிகற்பூரங்கள் கொண்டுவாவென்றார்
கண்டேனடாபத்தாவுன் சூதுகளத்தனையும்
 கைகட்டியெந்தனுக்கு மோசஞ்செய்தீர்
எந்தனைசாக்கிட்டு உன்மைந்தனைநீ தின்ன
 எத்தனைநாள்தவங்கள் செய்திருந்தீர்
எனக்கிச்சையிருந்துபிள்ளைக் கறிக்கிங்கேவந்தேன்
 இன்பமானகறியிங்கே காணேனடா
தலைக்கறியில்லாவிட்டால் சாதமுண்ணேனடா
 தவராமல்நானெழுந்து போறேனப்பா
ஆசனத்தோலைத்தா னெடுப்பாராம்சிவாமி
 அவருடனேபாத்திரத்தை கையிலெடுப்பார்

கஞ்சாக்குடுக்கையும் மாத்திரக்கோலையும்
　　கமண்டலத்தையெடுத்து தூக்கிவைப்பார்
ஐயர்பிணக்குக ளவர்பிரிவுங்கண்டு
　　அந்நேரந்திருவெண்காட்டு நங்கையம்மாள்
கையைநெறித்தாளம்மை கணகஞ்சொரிந்தாளம்மை
　　கணவன்பின்னேவந்து ஒளித்தாளாம்
தலையைப்புதையெனவே தாதிகையில்தந்தோம்
　　சமைத்துவைக்கச்சொன்னார் நாமறந்தோம்
புதைத்ததலைதனை யெடுத்துசமைக்கவே
　　போர்தல்லோசிலநேரஞ் சொல்லுமேதான்
தம்பிரானென்ன சாபந்தருவாரோயினி
　　தப்பிதங்கள்நேர்ந்ததென்ன செய்வேனென்றான்
அம்மன்துயரங்களை சந்தனநங்கை
　　யறிந்தல்லோயெதிரேவந்து தெண்டனிட்டான்
மனதில்விசனமென்ன மாதாவேதாயே
　　மகாதேவரென்னசொன்னார் சொல்லுமம்மா
தலையைபுதையெனவே உன்கையில்தந்தேன்
　　தலைக்கறிகேழ்க்கிறார் சங்கமரும்
சமைத்தேனம்மா தலை சமைத்தேனம்மா தாயே
　　யெடுக்கமறந்தேனம்மா யிந்தாவென்றாள்
தலைக்கறிகொண்டுவந்தாள் சந்தனநங்கை
　　யெடுத்துப்படைத்தாளிந்த வெண்காட்டாள்
தலைக்கறிபடைத்திட்டோம் தம்பிரானேவுனக்கு
　　சாதங்கறியமுது உண்ணுமென்றார்
இந்நேரமட்டுந்தேவ ரிளைப்போடிருந்தீர்
　　இப்போதுதேவரமுது கொள்ளுமென்றார்
அறிந்தண்டாவுங்களுட சிறுத்தொண்டபத்தனே
　　ஆசாரவுபசார மோசமெல்லாம்
உண்ணலாந்தலைக்கறி பின்னாலேயென்று
　　ஒளித்துவைத்தீர்கள் ருசியறிந்து
தலைக்கறியானது தம்பிரானுக்கற்புதம்
　　தானறிந்ததேயதை யொளித்துவைத்தீர்
நான்கேட்டதினால் தலைக்கறிகள்படைத்தீர்கள்
　　கேளாமற்போனால்மோசஞ் செய்வீர்கள்
அப்படிக்குத்துரோகம் செய்வதுமில்லை
　　தாதிபிசகதனால் வந்துதையா
மனமறிந்தேதுரோகஞ் செய்வதுமில்லை
　　மகாதேவரமுது கொள்ளுமென்றார்
இன்னமொருவசனங் கேளாய்பத்தா
　　யிவ்விடத்தில்வந்துவெகு நேரமாச்சு

எழுந்தபொழுதிலே யிங்கேவந்தேன்பத்தா
விடிந்தபொழுதுமட்டா யிங்கிருந்தேன்
இத்தடிகள்நடமாட வில்லையோடாபத்தா
சிறுபிள்ளைகுமலோசை கண்ட ல்லை
தண்டைச்சதங்கைசத்தம் கேட்டதில்லைபத்தா
தாலாட்டும்சதங்கைசத்தம் கேட்டதில்லை
மலடனும்மலடியும் வாழ்கிறவீட்டில்
வயிருவளர்க்கக்கணக் கில்லையென்றார்
ஆண்மலடன்பெண்மலடன் சஞ்சரிக்குமிடத்தில்
அறியாதேபமுதுண்ண வந்தேனென்றா
கேட்டாயோபெண்ணே வெண்காட்டுநங்கையே
இழுவனார்சொல்லுகிற சேதிதன்னை
பிசைந்தகெஞ்சாவெறியால் பித்தனாரையர்
அடியேனிருந்துண்ண வருவேனென்றார்
எநக்னுக்கொருபிள்ளை யிருக்குதுசுவாமி
யென்றுவிதங்களைத செய்வதென்றார்
அமுதுக்கறிசமைக்கச் சொன்னாரேசுவாமி
அப்படியேஅவருக்கு செய்துவைத்தோம்
பிள்ளையில்லாவீட்டில கொள்ளேனென்றுநணம்
பெண்ணேநான்மோசங்க ளென்னசொல்வோம்
இல்லாதபிள்ளையிப்போ சொல்லாதேவருமோயினி
யென்னசொல்லப்போகிறோம் பெண்ணேயென்றார்
சொன்னசொல்மறதியாய்ப் பேசுகிறார்சுவாமி
சொக்குப்பொடிமயக்கம் கொண்டவர்போல்
பொய்யானுமிவர்க்கு சொன்னோமேயாகில்
போசனங்கொள்வாரிந்த சங்கமரும்
மலடனுமல்லகா ணிவ்வடியாள்சிவனே
மலடியுமல்லகா ணிவ்வடியாள்
எங்கள்குடிக்கொரு பிள்ளையுமுண்டுசிவனே
ஆரதுக்குஆரவழி யவனபோனான்
உம்மிடதுடர்ந்தபசிக்குவந் துதவமாட்டான்
காதத்துக்குகாதவழி யவன்போனான்சிவனே
உம்மிடகடந்தபசிக்குவந் துதவமாட்டான
மாமியார்வீட்டுக்கு மருவுண்ணப்போனான்
வருகவென்றால்வெகு நேரஞ்செல்லும்
இந்நேரவேளைக்கு வந்தாலும்வாராது
இப்போதேவாமுது கொள்ளுமென்றார்
காதத்துக்குகாதவழி போனாலும்பத்தா
கடும்பசிக்குவந் துதவமாட்டான்
ஆரத்துக்குஆரவழி போனாலும்பத்தா

என்னுடையுகந்தபசிக்குவக் குதவவேணும்
அழைக்கவுஞ்சொன்னதொரு மால்கையானபடிசிவனை
அழைக்கவுஞ்சொல்லுகிறு ரென்னசெய்வோம்
இனியென்னசெய்வோமென்று இருவரும்பேசி
இருக்கின்றசெய்கைகளைத் தானறிந்தார்
வெள்ளிபிரம்புதந்தார் சொம்பில்சலந்தந்தார்
வெண்காட்டுநங்கையுட கைகொடுத்தார்
வாடிமகளாரே வெண்காட்டுநங்கை
மத்தியானவாசலிலே நின்றுகொண்டு
மத்தியானவாசலிலே முத்துவாசல்நின்று
மகனேமகனேயென்று அழைமகனை
சொம்பில்சலந்தன்னை பூமியில்தெளித்து
திருக்கைபிரம்பதினால் தட்டியல்லவோ
அழையம்மாவெண்காட்டு நங்கைநீயென்றுசொல்ல
அக்கோரஞ்சுவாமிசொல்லைத் தான்கேட்டு
அவர்க்குகுற்றங்கள்பெண்ணே வாராமல்போய்நின்று
கூப்பிடுமென்றல்லவோ அன்பன்சொன்னான்
ஐயர்சொல்தட்டாமல் வெண்காட்டுநங்கை
அந்நேரந்தெருவாசல் வந்துநின்று
ஒப்புக்குதிருவெண்காட்டு நங்கையும்போய்நின்று
உயர்ந்தகுரலாகத் தானழைப்பாள்

சீராளன் வருகிறது.

நான்பெற்றமகனாரே வாராயோதம்பி
நல்லறிவுசீராளா வாராயோடா
பள்ளிக்குபள்ளனாரே வாராயோ தம்பி
பாலகாசீராளா தேவா வாராயோ
ஓங்கியகுரலாகத் தானழைப்பாளம்மன்
ஓடிவருகுதுபிள்ளை வீதியிலே
நீண்டதெருவிலே நெடுந்தெருக்கோடியிலே
நிலையுள்ளஅன்பன்மகன் வருகிறான்
தேடியபுத்தகத்தைக் கையில்பிடித்து
நெடுந்தெருக்கோடிவழி எழுந்துவாரான்
தண்டைச்சிலம்புகளில் சதங்கைகுலுக்கவே
தம்பிசீராளன்தெருவில எழுந்துவாரான்
அறுத்தபல்காயங்கள் மேலேமறைக்கவே
அன்பன்மகனிங்கே யெழுந்துவாரான்
வந்ததொருபிள்ளையை மருங்கழைப்பாளோவென்று
தம்பிரானுங்கைலாசம் போயொளித்தார்
தம்பிரானைக்காணோமென்ற சொன்னசொல்கேட்டு
தட்டிவிட்டான்பிள்ளையை புறங்கையாலே

வந்தொருபிள்ளையை புறங்கையாலடித்தல்லோ
மகாதேவரைநினைத்து தானழுவாள்
வெண்காட்டுநங்கையம்மாள் அழுகிறசத்தம்
உமையவள்பார்வதிக்குக் கேட்டிடுமாம்
சந்தனநங்கையா லழுகிறசத்தம்
அறுபத்தொருகோடிமுடி யதிர்ந்திடுமாம்
சிறுத்தொண்டபத்தனு மழுகின்றசத்தம்
சிவனார்திருச்செவியி லடிபடுமாம்
சீராளதேவனு மழுகிறசத்தம்
கந்தன்கணபதிக்குக் கேட்டிடுமாம்
தான்பெற்றபிள்ளைதனை தாயுந்தகப்பனும்
தப்பாமலேயிவர்க ளடிக்கலுற்றார்
நீவந்தல்லோசுவாமி மறைந்துபோனார்
நிஷ்டூரபாலாயிங்கே நீயேன்வந்தாய்
இவர்கள்புலம்புகிற சத்தந்தன்னைக்கேட்டு
ஈஸ்வரியென்னசொல்வாள் சுவாமியுடன்
அன்னக்கொடிவிருதை அறப்பேடனென்றாய்சுவாமி
அவனுடன்அன்பபத்தி சோதியென்றோம்
ஆருமகப்படாமல் நீயேயொருவராய்
அவனுடமடத்துக்குநீபோயி
வழங்குங்கறிவகைகள் வேண்டாமென்றுசொல்லி
வழக்காக்கறிவகை நீர்கேட்டீர்
பிள்ளைக்கறியுஞ்சோறும் போட்டாயேயானால்
போசனங்கொள்வோமென்றீர் அவன்மனையில்
பிள்ளையறுத்துக் கறிசமைத்துவுனக்கு
போசனந்தந்தவர்க்கு மோசம்பண்ணி
சிந்தைகலங்கியவர் தேடிப்புலம்ப
சிவனாரேஉந்தனைத்தான் காணாமல்
அவர்கள்புலம்புகிற சத்தங்களிங்கே
அறுபத்துநாலுகோடிமுடி அதிர்ந்திடுமாம்
வெள்ளைவிடையிலேறி சிறுத்தொண்டர்பக்கல்
விமலரேகாட்சிதர வேண்டுமென்றாள்
பிள்ளையறுத்துண்ணவரப் போனேனேவடிபெண்ணே
பொய்யன்மெய்யனேவென் றறியப்போனேன்
சொன்னசொல்தவறுண்டி சிறுத்தொண்டபத்தனே
சோதித்தேனென்னாலே யானமட்டும்
அறுத்தபிள்ளையெழுப்பி அவன்வீட்டில்விட்டேன்
ஆருமறியாமலே வந்துவிட்டேன்
அவனுக்குமோட்சங் கொடுக்கவேணும்
ஆதியுமையவனே யெழுந்திரென்றார்

வெள்ளைவிடையின்மீதில் விமலருமேறினார்
    வீற்றிருந்தாளுமையாளும் பக்கலிலே
மூஷிகவாகன மேறினார்விநாயகர்
    முருகர்மயில்வாகன மேறுகிறார்
அன்னவாகனமேறி பிர்மாவும்வாரார்
    அம்மன்சிம்பவாகன மேறினாளே
மாயன்சிம்பவாகன மேறினாரே
    வானவருடனிந்திரன் வருகிறார்
ஆளிவாகனமேறி அழகாய்வீரபத்திரர்
    அவரொருபுரமாக வருகிறார்
முப்பத்துமுக்கோடி தேவருடனே
    முனிவரிஷிகளுடன் வருகிறார்
நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளொருபக்கம்
    நாகலோகத்தா ரொருபக்கம்வருக
இன்னரர்கிம்புருடர் சித்தவித்யாதரர்
    கெருடகாந்தருவர் வருகிறார்
ஆதிசிவனுடனே அனைவருஞ்சூழ்ந்து
    அரகராசத்தியஞ்செய்து வருகிறார்
சங்கநாதந்தொனிகள் செயகண்டிவாத்தியம்
    சத்தசமுத்திரம்போல் கோஷ்டமிட
ஆகாசவீதியிலே ஆதிசிவனுடனே
    அனைவருங்கூடியங்கே வந்துநின்றார்
வெள்ளைவிடையைவிட்டு விமலரிறங்கி
    வேறொருசங்கமரைப் போலானார்
அழுகிறசிறுத்தொண்டன் பக்கலுக்குவந்து
    ஆரடாசிறுத்தொண்ட பத்தாவென்றார்
உம்மைப்போலேயொரு சங்கமனார்வந்தார்
    உறுதியாய்ப்போசனந் தருவேனென்றேன்
பிள்ளைக்கறியுஞ்சாதந் தின்னவேயிங்கே
    பொருந்தியிருந்தாரங்கே விரும்பவில்லை
அறுத்தபிள்ளையெழுந்து வந்ததுசுவாமி
    அவர்வந்திருந்தயிடம் வனமாச்சு
நல்வரார்வந்திருந்தயிடம் வனமாச்சு
    ஏமாந்திருந்தோமவர் வெளியானார்
மோசங்கள்செய்து மகாதேவரெங்களை
    மோட்சங்கொடுக்காமலே அவர்போனார்
காண்போமேயாமானால்நாங்கள் கொண்டபலந்தீர்வோம்
    காணாமற்போனாலே உயிர்விடுவோம்
நான்தாண்டாசிறுத்தொண்ட பத்தாவுன்னிடத்தில்
    நாதருஞ்சோதிக்க வந்தேனென்றார்



# சிறுத்தொண்ட பத்தன்கதை.

மண்ணுலகத்திலே வாழ்கிறையோபத்தா
பொன்னுலகத்திற்கு வாராயோவென்றார்
மண்ணுலகத்திலே வாழ்ந்தாச்சுசிவனே
பொன்னுலகத்திற்கு வாரேனென்றார்
பொன்னுலகத்திற்கு வாரதேயுண்டானால்
ஏறும்பிள்ளா யிந்திரரதமேறு
நானொருவனுமாக வருவேனோசுவாமி
நாதரேயொருவார்த்தை சொல்லுகிறேன்கேள்
உப்பிடுந்துணைகள்வேணும் தம்பிரானேசிவனேயெனக்கு
உதவித்துணைகள்வேணும் தம்பிரானே
நெருப்பிடுந்துணைவேணும் தம்பிரானேசிவனே
நீரிடுந்துணைவேணும தம்பிரானே
அந்தவண்டையேழு மிந்தண்டையேழு
வழுயேழுபதினாலாக வேண்டுமென்றான்
உனனோடேபதினைந்து வீட்டோடேகயிலாயம்
உனபுறம் வருவேனென்றாய்
தனனோடேசெய்தகலந் தன்னோடேயல்லாமல்
பின்னேயொருத்தருக் குதவியுண்டோ
உத்தனைவாருமென்றால் சிறுதொண்டபத்தா
ஊரெல்லாம் கூட்டுவிருவொன்றாக
நான்செய்தபாவங்களில் பாதிபகுந்திட்டு
நாதரேமோட்சந்தா வேண்டுமையா
மூவஞ்சிபதினஞ்சி வீட்டுக்காரருக்கு
மோட்சங்கொடுக்கவேணும் சுவாமியென்றார்
பார்த்தாயோபெண்ணே உமையேபார்வதியே
பாலகன்சொன்ன வார்த்தைகளை
அன்பர்சொல்தப்பாதே ஆதிசிவனாரே
அறுபத்தொருகோடிமுடி யடங்குமென்றாள்
ஏறும்பிள்ளாயிந்திர ரதமேறும்பத்தா
யேழுயேழும்பதினாலாக வந்தமரும்
சிறுத்தொண்டன்வீட்டோடே பதினைந்துவீட்டுக்காரர்
தெய்வபுரங்கூடி தான்வாரார்
ஆகாசகெந்திருவர் புட்பமதனைக்கொண்டு
அடர்ந்தவிருபுறமும் மழைபொழிய
ரம்பையூர்வசியாள் மேனைதிலோர்த்தமை
நடனங்களாடியே முன்னேவர
அடுத்தாள்கயிலாசமும்சாலைவாசல்
அறிந்தாரேகணபதி யெண்ணமிட்டார்
பெண்சாதிசம்மதிக்க சொன்னசொல்லெல்லாம்
பொய்யாகப்போச்சுதென்று ஏதுசொல்வார்

ஆரடா தெய்வபுரம் வாரவனென்று
அதட்டினார்வேழமுகம் மூடையோனும்
சனியன்மருத்துவத்தால் சிறுத்தொண்டபத்தன்
தானென்றவாணுவமா யேதுசொல்வான்
பிள்ளையறுத்துக்கறி சங்கமருக்கிட்டு
பேருபெற்றிங்கேவாரேன் தெய்வபுரம்
ஆரடாயிங்குவந்து அதட்டுவதென்றார்
அறிந்தாரே ஆதிசிவனாரும்
பிள்ளையறுத்திட்ட பெருமைகள்சொன்னாய்
பொறுடாசிறுத்தொண்டா நில்லுமென்றார்
தேரையும்நிறுத்துமென்றார் சுவாமியுமந்நேரம்
சிந்தைகலங்கியம்மன் திகைத்துநின்றாள்
வரம்பெறவெண்காட்டு நங்கையுமன்னேரம்
வந்தாளேதேரைவிட்டு தானிறங்கி
மன்னவர்சொன்ன பிழைபொறுத்துசுவாமி
மங்கிலியப்பிச்சை தாருமென்றாள்
அன்பனார்செய்தபிழை தேவர்பொறுத்து
அறுபத்தொருகொடிமுடி படக்குமென்றாள்
ஆதியிலேஉனக்கு வரங்கள்கான்கொடுத்தேன்
அழிப்பதுமொருக்காலு மில்லையம்மா
தெய்வபுரத்தைவிட்டு திரும்பென்றுசொன்னேன்
திருவாக்குதவரவொண் ணாதுகண்டாய்
புத்தியில்லாமனுஷன் சிறுத்தொண்டபத்தனை
பூலோகந்தன்னிலே கொண்டுபோயி
அவனைப்போல்பத்த னனேகம்அவனியில்
கொண்டுபோயறியவே தெரியவைத்து
தெரியப்படுத்தியல்லோ சிறுத்தொண்டபத்தனை
தெய்வபுரமங்கே கூட்டிவாரேன்

மறுபடியும் சிறுத்தொண்டபத்தன் பூலோகம்வருகிறது.

இங்கேயிரும்வெண்காட்டு நங்கையம்மாளென்று
யிறங்கினாரிருவரும் பூலோகம்
பூலோகம்வந்திறங்கி யிருவருமாக
போரார்பார் காரைக்காட்டம்மையண்டை
ஆதியிலேவேளாளர் குலத்திற்பிறந்து
அஞ்சிபிராயத்தில் விவாகஞ்செய்து
தவஞ்செய்தொரு பிள்ளையைபெருமவன்
பின்பல்லோதன் னுடைய கணவனாரிறந்ததால்
ஒருவர்பொருளெனக்கு வேண்டாதுமண்டோதரி
ஒருபிள்ளையுட னூரில் வாழ்ந்திருந்தாள்

கூலிக்குக்குத்தியல்லோ காரைக்காட்டம்மை
கொண்டுவந்துஒருக்காலே சேர்க்கிறது
அகத்திலொருவருக் கன்னங்கொடுப்பாள்
அதிதிபரதேசிக ளானவற்கு
தவிடுநொய்யுமாகவே களியாய்கிளரி
தன்பிள்ளையுந்தானுமாய்க் கொள்ளுறதும்
அமுதுபடியெடுத்து கறிகள்சமைத்து
அகத்திற்கொருவர்க்கன்னந் தான்கொடுப்பாள்
இப்படியிருக்கிற நாளையிலீஸ்வரர்
இவள்மனதை சோதிக்கவருகிறார்
சிறுத்தொண்டனையழைத்து தெய்வபுரம்விட்டு
திரும்பினார்பூலோகந் தன்னிலேதான்
தம்பிரான்போலேயல்லோ சுவாமிவடிவானார்
தபசுபிள்ளையுமானா னன்பனவன்
காரைக்காட்டம்மைபதி தேடிவந்தாரிவர்
காலிகள்மேய்ப்பானவன் புத்திரனும்
ஊரார்காலிகள்மேய்த்து அவனுடையபிள்ளை
ஒருவனுமேதனித்து போயிருப்பான்
அந்தவேளையில்சுவாமி சங்கமரைப்போல்வந்து
அடித்தாரேசெயகண்டி வாச்சியத்தை
சங்குநாதத்தொனிகள் சத்தங்கள்தான்செய்து
தலைவாசலிருவரும் வந்துநின்றார்
கேட்டாளேகாரைக்காட் டம்மையுமந்நேரம்
கெண்டிகையில்சலமும் புஷ்பமுங்கொண்டுவந்து
பாதந்துலக்கியம்மாள் பட்டால்துடைத்து
பத்திரபுஷ்பங்கொண்டு அர்ச்சனைசெய்தாள்
கைகட்டிவாய்புதைத்து காரைக்காட்டம்மனும்
கர்த்தரைப்பார்த்துவெகு வசனஞ்சொல்வர்ள்
எங்கெங்கும்நீயாகி தங்கினவாபோற்றி
யேழையைக்காக்கவந்த தாள்போற்றி
திங்களணிந்தமுடி கெங்கையைத்தரித்த
செம்பொனம்பலவாணரே போற்றிஜயா

அடியேன்மடத்தில்தேவ ரமுதுக்குமில்லும்
அதிதிக்குஒருவிரதம் சுவாமியென்றாள்
பணிரெண்டுமணிநேர மிங்கேவந்து
பசியாறிப்போங்களிருவர் சுவாமியென்றாள்
அப்படியேநல்லதம்மா அமுதுக்குவாறேன்
அடுத்ததெருவிலொருவ ரமுதுசொன்னார்
அங்கேயும்போய்ப்பார்த்து வாரேன்தாயே
அரைநாழிகைநேரம் செல்லுமென்றார்
அமுதுக்குசம்மதித்து அம்பலவாணர்
இவளுடைபிள்ளைபக்கல் தேடிப்போரார்
மாடுகள்மேய்த்தல்லோ மரத்துநிழலில்
மந்தைமடக்கியவ னங்கிருப்பான்
அஞ்சுபிராயமுள்ள அரியாக்குழந்தை
அவனுடபக்கலுக்கு ஓடிவந்தார்
ஆரடா தம்பியுன் தாயாரழைக்கிறாள்
அமுதுபொசிக்கவுன்னை கூப்பிடுராள்
ஆனால்கேள்தம்பிரானே அயலார்கள்மாடல்லோ
அடுத்தவயலில்போரில் போய்விழுந்தால்
தெண்டம்பிடித்திடுவார் திவானத்தார்கள்
திருக்கையில்கோதண்டம் போட்டடிப்பார்
எப்படிக்கியான்போவே னென்றானேபிள்ளை
யேதுசெய்வாராதி சிவனாரும்
நீபோய்வருமளவும் மாடுகளைமேய்த்து
காவலாயிருக்கிறேன் தம்பியென்றார்
அமுதுவைத்துக்கொண்டல்லோ யழைக்கிறாள்
அரைநாழிக்குள்ளாகத்தான் வாருமென்றான்
நான்போய்வருமளவு மிங்கேயிருவென்று
நடந்தானேயறியாத பிள்ளையுந்தான்
இவனங்கேபோகுமுன்னே காரைக்காட்டம்மை
இருநாழியமுதுகொண்டு தான்சமைத்து
காரைக்கீரையுந்தவுடும் களியாகக்கிளறி
கர்த்தருக்கற்புதமா யிருக்கிவைத்தாள்
சாத்தமுத்துவைய லாத்துவைத்துஅம்மன்
தண்ணீர்க்குடமெடுத்துப் புறக்கடைக்கி

அந்தவேளையில் சுவாமியனுப்ப
அவனிடமாளிகையை யோடிவந்தான்
சாதம்வடித்துக்கட்டி ஆறவைத்திருக்கும்
தவிடுக்களியுந்தின்ன பிள்ளையல்லோ
கண்டவுடனேபிள்ளை கலத்தையெடுத்தல்லோ
கையினால்சாதங்கொஞ்சம் அள்ளிவைத்து
ஆவலுடன்கீரையுஞ் சாதம்பிசைந்து
அள்ளியுண்ணையில்தாயார் வந்துவிட்டாள்
தண்ணிக்குப்போன தாயாரன்னேரம்வந்து
தன்னிடபிள்ளைதனைக் கண்ணில்கண்டாள்
கண்கள்பொறிபறக்க கடுங்கோபமாகி
கையாலுலக்கையைத் தூக்கிவந்து
சங்கமருக்கன்னமல்லோ சமையல்செய்துவைக்க
சடுதியில்நாய்வந்து வாயைவைத்து
எந்தன்தவத்திற்கு இடர்வந்ததென்றல்லோ
யிருகையாலுலக்கையைத் தான்சுழற்றி
அடித்தாளேபிள்ளையிட மூளைசிதற
ஆயிரஞ்சுக்கலாய்த் தானேபிளக்க
கண்ணுலும்காதாலும் வாயாலுஞ்சீவன்
கதறிவுயிர்தானிங்கே போகையிலே
அறிந்தாரேயன்னேரம் ஆதிசிவனாரும்
ஆகாயம்போமுயிரை வாருமென்றார்
செந்தாமரைச்செவியினில் பதனங்கள்செய்து
சிறுத்தொண்டனையழைத்து சுவாமியாரும்
மந்தைக்குகாவல்சில தூதரைவைத்து
வருகிறார்சுவாமியவ ரன்னேரம்

மறுபடியும் சுவாமிவருகிறது.

தெருவாசல்வந்துநின்று யிருவருமாக
செயகண்டிவாத்தியத்தைத் தானடித்தார்
அரகராசத்தஞ்செய்து ஆதிசிவனாரும்
அன்னம்போடும்மாவென் றேவருவார்
பசிவேளைக்குத்தந்தால் அம்பலவாணர்
பத்திரந்தனக்கே வரமளிப்பார்
அறிந்தாரேகாரைக்காட் டம்மையுமக்கேரம்
ஐயரறிந்தாலமுது கொள்ளேனென்பார்

எடுத்துப்புதைத்துஸ்நானஞ் செய்யவேணுமென்றாள்
இதோவந்தோம்சுவாமியா ரென்றுசொல்லி
ஐயர்போசனஞ்செய்து போனபிற்பாடு
ஆருமறியாமல்நாம் புதைக்கவேணும்
பாயில்சுருட்டியல்லோ வாரியெடுத்து
பரணையிலொளித்து ஓடிவந்தாள்
ஐயருக்குப்பாதபூசை செய்துமலர்அர்ச்சித்து
அவளிடமாளிகைக்கு கூட்டிவந்தாள்
இங்கோங்கேவரீ ரிளப்போடிருந்துவிட்டீர்
இப்போதுபோசனங்கள் கொள்ளுமென்றாள்

## போசனம் பரிமாறுகிறது.

வட்டமணைகொண்டு பாலித்திருவருக்கும்
வாழையிலையெடுத்துத் தான்போட்டாள்
தண்ணீர்தெளித்தல்லோ அன்னங்கள்பாலித்து
தவிட்டுக்கீரைதுவையல் தான்படைத்தாள்
தாம்பூலந்தூபதீபந் தட்சணையும்வைத்து
தண்ணியுமொண்டுகையில் கொண்டுவந்தாள்
பசித்தவேளைக்கமுதுயென் கையினாலர்வது
பசியாறிப்போங்களிருவர் சுவாமியென்றாள்
கைகட்டிவாய்புதைத்து பின்னாலேநின்றாள்
கர்த்தரேதேவரமுது கொள்ளுமென்றாள்
போசனங்கள்கொள்ளுமென்று யென்தாயேகேளும்
பிள்ளையில்லாவீட்டி லுண்ணேனென்றார்
அழும்பிள்ளைகுரலோசை கேட்டதில்லையம்மா
அப்பாமகனேயென்ற சொல்லுமில்லை
மலடியாய்க்காணவில்லை யென்தாயேநீதான்
மைந்தனையீன்றவள்போல் காணுதம்மா
பிள்ளையிருந்தாக்கா லென்தாயேநீதான்
போசனங்கள்கொள்ளுதற்கு அழையுமென்றார்
ஆனாலுமுரைக்கிறேன் தம்பிரானேசிவனே
அடியேனுக்கொருபிள்ளை யுண்டுகண்டாய்
என்தன்புருஷனிறந்த பிற்பாடுபிள்ளை
இருந்தது அஞ்சி பிராயமட்டும்

கொண்டதவங்கள்பாதி குறையாகப்போச்சுது
    கொள்ளுங்களமுது சுவாமியென்றாள்
எந்தனுக்கொருபிள்ளை யுண்டுகொண்டேவா
    இறந்துமடிந்துதெய்வ புறம்போனான்
இறந்துமடிந்துதெய்வ புறம்போனபிள்ளை
    இப்போதுதேவர்க் குதவுமோதான்
அதனாலேகுற்றமில்லை தம்பிரானேசிவனே
    அடியேன்மலடியல்ல வமுதுகொள்ளும்
மாண்டுமடிந்தாலும் வைகுந்தஞ்சேர்ந்தாலும்
    வருந்துபசிக்குவந் துதவவேண்டும்
செத்துமடிந்தாலும் சிவபுரஞ்சேர்ந்தாலும்
    சிறுபிள்ளைபசிக்குவந் துதவவேண்டும்
பிள்ளையில்லாவீட்டில் போசனஞ்செய்யேன்
    பொற்கொடியேநானெழுந்து போறேனம்மா
கெஞ்சாக்குடுக்கையும் கையில்மாத்திரைகோலும்
    கமண்டலம் ஆசனத்தைத் தானெடுப்பார்
போசனங்கொள்வதில்லை போறேனம்மாவென்று
    புலித்தோலாசனத்தைத் தானெடுப்பார்
ஐயர்பிணக்குகளை மெய்யாவறிந்தல்லோ
    ஆகாரவிதற் கென்னசெய்வோம்
யிசைந்தநெஞ்சாமனத்துக் கிசைந்தபடியே
    பேசுவார்மனங்கொண்ட படியாக
மாண்டுமடிந்தபிள்ளை வரவேணுமென்றால்
    மண்டலத்திலில்லாத வார்த்தைசொன்னார்
செத்துமடிந்தபிள்ளை திரும்பிவரவேணுமென்றால்
    தேசத்திலில்லாத வார்த்தைசொன்னார்
ஆனாலுரைக்கிறேன் தம்பிரானேஐயா
    அடியேன்வளர்த்ததொரு நாயுமுண்டு
ஓசந்திபாவனென்று உந்தியிலென்னாளும்
    ஓடிவந்துவாயை வைத்ததுதான்
கூலிக்குக்குத்திதின்ன வுலக்கையினாலே
    கொண்டதுகொண்டபடி யானடித்தேன்
கையாலடித்துமெள்ளக் காதுப்பற்றியிழுத்து
    கண்காணப்பிணமாகத் தானறிந்தேன்

அந்தப்படியேவும்மை நானடிப்பேனென்று
  அவள்கையுலக்கைதன்னைத் தானெடுத்தாள்
அன்னங்கொண்டால்தேவ ராச்சுதுசுவாமி
  அகடுசெய்தாலுலக்கை யாலடிப்பேன்
இல்லாதபிள்ளையிப்போ யெங்கேயிருந்துவரும்
  என்னையனேயெங்களிட குலதெய்வமே
கையாலுலக்கைகொண்டு காரைக்காட்டாள்நிற்க
  கண்டல்லோசுவாமியுமே சிரித்தார்
அறிந்தாயேசிறுத்தொண்ட பத்தாவுன்மனதின்
  அறுத்தேன்பிள்ளையையென்று பெருமைசொன்னாய்
உனக்காகிலுமொரு பிள்ளையிறந்தாலுன்
  தேவியிருக்கப்பிள்ளை யுண்டுகண்டாய்
அவளுக்குமணக்கோல மில்லையடாபத்தா
  ஆணாலும்புருஷனில்லா விருத்தையல்லோ
இறந்தாலொருபிள்ளை யிருந்தாலொருபிள்ளை
  இதைவிடவேறேகதி யில்லையோடா
நாயையடித்ததொரு தடியாலேயிங்கே
  நாமுமடிபட வந்தோமடா
இவனைப்போலேதவ முள்ளவனேபத்தா
  ஈரேழுலகந்தன்னில் கிடையாது
பிள்ளையறுத்துக்கறி சமைத்திட்டேனென்று
  பெருமையாய்ச்சொல்லவந்தாய் தெய்வபுரம்
உன்னிலுமிகுத்தோ ருறுதிபடைத்தவர்
  உலகத்தில்மேலான பேர்களுண்டு
இன்னுமிவள்மனதை சோதிப்போமென்று
  யேதுசொல்வாரவள் முகம்நோக்கி
அன்னமேதாயேநான் சொன்னசொல்தட்டாதே
  ஆதிசிவத்துக்கொப்பாய்ச் சொல்லுகிறேன்
மகனேமகனேயென்று மூன்றுசொல்கூப்பிடும்
  மாதாவேபோசனம்நான் கொள்வேனென்றார்
ஐயர்சொல்தட்டாமல் நானுமழைக்கிறேன்
  பிள்ளையைத்தப்பாம லிப்பொழுது

அப்பாமகனே பரந்தாமாவென்றுபிள்ளை
அழைக்கிறாளதிக குரலோசையாய்
பாயில்சுருட்டியல்லோ பரணையின்மேல்வைத்த
பிள்ளை தான்பதைக்கவுயிர் வந்திடுமாம்
செந்தாமரைச்சிமிளி லிருந்தவுயிரையப்பா
பிள்ளையுடலில்சுவாமி தான்விடுத்தார்
உயிரைவிடுத்தளவில் உருண்டுதிரண்டுபிள்ளை
உம்பர்பிரான்முன்னேவந்து தான்பணிந்தான்
அப்போதுஉம்பர்பிரா னென்றுமிகக்களித்து
மாதாஉவத்தாமழைத்து யேதுசொல்வார்
எந்தனுக்காகவுன் மைந்தன் தலையுடைத்தாய்
இப்போதுகைலாயம் வாங்களென்றார்
அந்தவசனங்கேட்டு காரைக்காட்டம்மாளும்
அதிகமகிழ்ந்து தானு மேதுரைப்பாள்
அப்படியேநானுமுன் சொற்படியாகவே
நாதருடனேசபைக்குவாரோமென்றாள்
வாருமென்றுசொல்லி விமலருமப்போது
வான்புஷ்பவிமானத்தி லெழுந்தருளி
சிறுத்தொண்டபத்தனும் காரைக்காட்டம்மனும்
சிறுவனுமாகவே போய்மறைந்தார்
தம்பிரானப்போது சிறுத்தொண்டனைப்பார்த்து
தயவாகமுகம்நோக்கி யேதுசொல்வார்
உன்மைந்தனைக்கொன்று எனக்குவிருந்துசமைத்து
மகாபெரியதவமென்று தானுரைத்தாய்
காரைக்காட்டம்மைசேதி கண்டாயோபத்தா
கனிவுடனே அன்பா வின்னமெத்தவுண்டு
என்றுசொல்லிதம்பிரான் இத்தாதிபேருக்கு
இந்திரனார்லோக பதவிதன்னை
சிறுத்தொண்டபத்தனால் பூலோகத்திற்சிலபேர்
சேர்ந்தார்கள்சிவனது பதவிதன்னை
இந்தக்கதைதன்னை படித்தோர்கள்யாவரும்
இந்திரன்பதவிதன்னை யடைந்திடுவார்

சிறுத்தொண்டபத்தன்கதை சிறப்போடுகேட்போர்கள்
சீராகப்படிப்போர்கள் தான்வாழி
மண்டலத்திற்சிறுத்தொண்டன்கதை தன்னை
சிறப்பாகஅச்சிலிட்டோர் சிவன்பதம்பெற்றுவாழ்வார்
சீராளன்தேவிகதை சிறப்பாகபடிப்போர்கள்
செகதலத்தி லென்னாளும்வாழி
திருவெண்காட்டு நங்கைகதை
தான்படித்தோர்பூவுலகில் மிகவாழ்வார்
வாழிவாழியிந்த மண்டலந்தனிலுள்ள
தேவர்களுமானிடருந் தான்வாழி.

சிறுத்தொண்ட பத்தன்கதை

முற்றிற்று.

# அயக்காந்த திராவ

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தா
கொடிய வியாதிகளை ஆச்சரியமாய் கண்டிக்
இதை அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள்
துச் சந்தோஷிக்கிறனர். வியாதியினலா
தகவாசத்தினலாவது இளைத்துப்போயிருக்
தைப் புஷ்டியாக்கி பலவிர்த்திதருவதில் இ
மருந்தாகும். ஆங்கில முறைப்படி தயா
அருமையான மருந்து. இதை உட்கொண்ட
வேளையில் ஆச்சரியமான சுகத்தையடை வா
திராவகத்தால் தீரும் வியாதிகளில் முக
வற்றை இங்கே குறிப்பிடுகிறோம்.

நரைத்தமயிரைக் கறுப்பாக உ
வது புழு வெட்டினலாவது [illegible] உதிர்வ
நீர்வியாதிகள் தீரும் [illegible] எரிச்சல்
இவை தீரும் முகவசீகரத்தை உண்டாக்கும்
யையோட்டும் ஜீரணசக்தியையும் நல்ல பசி
டாக்கும் மனதை அதிக உற்சாகப்படுத்
களுக்கு அதிக வலுவைத்தரும் தேகத்தில்
தைச் சாப்பிட்டால் நம் [illegible]
சி [illegible] துபடுதாலும் [illegible] ரகும் ரோகங்களை
சத்ததாதுக்களும் நல்ல [illegible] தத்தரு
மூலவாய்வு மலச்சிக்கல் [illegible] தீரு

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்த
[illegible] சாப்பிட்டால் இணையில்லாத ஆனந்தத்
இழந்துபோன தேகதிடத்தைப்பழையபடி ய
இதைவிட வேறு மருந்தே கிடையாது 40-நா
உட்கொள்ளும் பக்ஷத்தில் வியாதி எட்டதே
னின் நிழலைக்கூட அணுகாது தேகம் வஜ்ஜிர
இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது.

அரைமண்டலம் 20-நாளைய மருந்தின் விலை ரூபா 1—
டஜன் 1-க்கு ரூபா. 12—0—0

ஒருமண்டலம் 40-நாளைய மருந்தின் விலை ரூபா. 2—
டஜன் 1-க்கு ரூபா. 21—0—0

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்
பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, ம